உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

## மதுரைத்தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் பிரசுரமாகும் ஒரு தமிழ்ப்பத்திரிகை.

எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்—திருவள்ளுவர்.

தொகுதி-௪] பராபவஹு ஆடிமீ. [பகுதி-௯.

உள்ளுறை.


'ஒப்புரவறிதல்':— பத்திராசிரியர். ௪௩௪

பெரியபுராண அரும் பதவிளக்கம்:— ஸ்ரீமத்-ஜி. சதாசிவம்பிள்ளை. ௪௪0

நல்லொழுக்கம்:— ஸ்ரீமத்-இலக்குமணப்போற்றிகள். ௪௪௮

பஞ்சதந்திரம்:— ஸ்ரீமத்-S. சாமிநாதஐயர். ௪௫௭

இராமாவதாரச் செய்யுட்பாடாந்தரம்:— ஸ்ரீமத்-சி. கணேசையர். ௪௬0

ஸ்ரீ பட்டர் வைபவம்:— ஸ்ரீமத்-வை மு. சடகோபராமாநுஜாசாரியர். ௪௬௪

கல்வியின்பம்:— ஸ்ரீமத்-ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை. ௪௭௩

கடைவள்ளலார் காலம்:— ஸ்ரீமத்- S. கிருஷ்ணசாமி ஐயங்கார், M. A., ௪௭௬

"பொருட்பெண்டிர்" என்னுந்திருக்குறள். ஸ்ரீமத்-அ. மாதவையர் B. A., ௪௮௪

பத்திராசிரியர் குறிப்பு:— ௪௮௭

பாண்டியசாஸனங்கள்:— ஸ்ரீமத்-து. அ. கோபிநாதராவ் M. A., ௪௮௯


மதுரை:

தமிழ்ச்சங்க முத்திராசாலைப்
பதிப்பு.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] 1906. [தனிப்பிரதி அணா 8.

## திருச்சிற்றம்பலம்.

நம் மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் "பாண்டியன் புத்தகசாலை"க்கு அடியிற்குறித்த அபிமான சிலர்கள் ஏட்டுப்பிரதிகளும் அச்சுப்பிரதிகளும் உதவினமைக்குப் பெரிதும் நன்றிகூறுகின்றேன்.

### ஏட்டுப்பிரதிகள்.

1. விடுபாடல்
2. திவாகரம்
3. நீதிசாரம்

} மகா-௱-௱-ஸ்ரீ Y. S. டேலர்போதகரவர்கள். மதுரை.

4. நீதித்திரட்டு:— ஸ்ரீமத் J. தம்பிப்பிள்ளையவர்கள், ஆடிட் ஆபீஸ் [கொழும்பு.

5. திவாகரம்
6. பிராயச்சித்த சமுச்சயம்.
7. பாரதமாவிந்தம்.
8. ஆசுசதீபிகை.
9. உடலறிவிளக்கம்.

} ஸ்ரீமத்-காரை-கா. சிவசிதம்பர ஐயரவர்கள்.

### அச்சுப்பிரதிகள்.

1. சேது பர்வதவர்த்தனியம்மை பிள்ளைத்தமிழ்.—ஸ்ரீமத்-அருணசலக் கவிராயரவர்கள், மதுரை.
2. விவேகபாநு 4-வது புஸ்தகம்:—ஸ்ரீமத்-கந்தசாமிக் கவிராயரவர்கள் மதுரை.
3. பன்னிருதிருமுறைத்திரட்டு :—ஸ்ரீமத்-சி. வ. அருணகிரிமுதலியாரவர்கள், சோளங்கிபுரம்.
4. காலப்பிரகாசிகை:—ஸ்ரீமத்-ஆர். ஹரிஹரசாஸ்திரிகள், மகோபாத்யாயர், திருவனந்தபுரம்.

5. கோயிற்புராணம்.
6. பதினோராவது நிகண்டு மூலமுமுரையும்
7. அருணகிரியந்தாதி.
8. பதிபசுபாச விளக்கம் முதலியன
9. புட்பவிதி முதலியன
10. மறைசையந்தாதி மூலமுமுரையும்.
11. மாசபூஜாவிதானம்.
12. மாவைப்பதிகம், மாவையிரட்டைமணி [மாலை.
13. ஏலாதி மூலமுமுரையும்.
14. திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி.
15. வருணகுலாதித்தனுலாமடல்.
16. ஜீவகாருண்யபோதம்.
17. வாசகக்குறிகள்.

} ஸ்ரீமத்:—காரை-கா சிவசிதம்பரஐயரவர்கள்.

பொ. பாண்டித்துரை.

அக்கிராசனாதிபதி.

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௪] பராபவஹ ஆடிமீ [பகுதி-௯.

## ஒப்புரவறிதல்.

தெய்வப்புலமைத் திருவள்ளுவனார், உலகத்தார்க்கு இன்றியமையாது அறிவுறுத்தற்குரிய விஷயங்களை முப்பாற்படத்தொகுத்து, அம்மூன்றுளொவ்வொன்றும் பற்பல அதிகாரங்களுடையதாக விரித்துரைத்தாரென்பது பலர்க்குந்தெரிந்தது. அம்முப்பகுதியுள் முதலதாகிய அறத்துப்பால், இல்லறவியல் துறவறவியல் என இருதிறப்படும். இல்லறவியல்:—இலவாழ்க்கை முதலாகப் புகழீறாகப் பத்தொன்பது அதிகாரங்களுடையதாம். இப்பத்தொன்பதனுள் "ஒப்புரவறிதல்" என்பதுமொன்று. ஒப்புரவு என்னுஞ்சொல் உபகாரம், ஒற்றுமை, சமாதானம் முதலிய பலபொருளை யுணர்த்துமேனும், திருக்குறளில் தெய்வப்புலவர் எக்கருத்தில் அதனை வழங்கினர்? என்பதே இங்கு நாம் ஆராய எடுத்துக்கொண்டது. பரிமேலழகர், 'ஒப்புரவறிதல்' என்பதற்கு—'உலகநடையினை அறிந்துசெய்தல்; உலகநடை வேதநடைபோல அறநூல்களுட் கூறப்படுவதன்றித் தாமே அறிந்துசெய்யுந் தன்மைத்தாகலின் ஒப்புரவறிதல் என்றார்' எனவுரைத்தார். இவ்வாறு 'உலகநடையினை யறிந்து செய்தல்' என்று அவ்வாசிரியர் பொருள் கூறுதலால், உயர்ந்தோர் ஒழுகிய நெறியில் ஒழுகல் என்பதே அவ் 'வுலகநடை' க்குப்பொருளென்று கொள்வோமெனின்:—ஒப்புரவறிதலதிகாரத்துவரும் திருக்குறள்களில் ஒன்றேனும் அவவொழுகநத்தைக் குறிக்காமையானும், ஆன்றோராசாரம் போற்றலை 'ஒழுக்கம்' என்னும் அதிகாரத்துள் "உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங், கல்லா ரறிவிலா தார்" என்ற குறளில் விளக்குதலானும், பரிமேலழகரும் அக்குறளின் விசேடவுரையில்

"உலகத்தோடு பொருந்த ஒழுகலாவது—உயர்ந்தோர் பலரும் ஒழுகியவாற்றான் ஒழுகுதல்......ஒழுகுதலைக் கற்றலாவது அடிப்படுதல்" எனக் கூறுதலால் 'சிஷ்டாசாரம்' குறிக்கப்பட்டமையானும் அது கருத்தாகாது.

இனி, 'ஒப்புரவறிதல்' என அதிகாரமிட்ட தெய்வப்புலவர் கருத்து யாது? பரிமேலழகர் கூறிய "உலகநடையினை அறிந்துசெய்தல்" என்பதில், 'உலகநடை' என்னுந்தொடர்க்கு "உலகத்தின் நடைபேறு" என்று பொருள்கொள்ளுதல் வள்ளுவனார் திருவுள்ளத்துக்கும் ஏற்றதாகும். என்னை? ஜனசமூக வாழ்க்கைக்கு இன்றியமையாத லோகோபகாரங்களை அறிந்து செய்தல் என்பதே ஒப்புரவறிதலதிகாரத்துவரும் ஒவ்வொரு திருக்குறளும் விளக்கி நிற்றலால் என்க. ஜனசமூக வாழ்க்கையாவது:—தனியரசுபுரியும் சக்கரவர்த்திமுதல் தாழ்மையுற்ற குடியானவனீறாகவும், நுண்ணறிவுபெற்ற புலவன்முதல் எண்ணெழுத்தறியாக்கசடனீறாகவும், முற்றத்துறந்த முனிவன்முதல் பற்றேமிக்க உலகாயதனீறாகவும், மெச்சும் வலியுடை வீரன்முதலா அச்சமிகவுடைய பேடியீறாகவுமுள்ள உலகத்து மாந்தரெல்லாம் பரஸ்பரவுதவியானே வாழ்ந்து வருகின்ற நிலையாகும். செல்வம் வலிமுதலியவற்றை ஒருவன் எவ்வளவு மிகுதியாக அடையப் பெற்றானேயாயினும், பிறருடைய உதவியில்லாவிடத்து அவன் உலகத்தே தனித்துநின்று இல்வாழ்க்கையாலாய இன்பத்தை நுகர்தல் ஒருபோதுங் கூடாதென்பது திண்ணமன்றோ. முற்றத்துறந்த துறவிக்கும் இல்வாழ்வானது துணை இன்றியமையாததென்பது.

"துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வா னென்பான் றுணை"

என்பதனால் விளங்கும். இவற்றால், இவ்வுலகவிருத்தி மக்களின் பரஸ்பரவுதவியின்றிக் கைகூடாதென்பது தெளிவாம். இனி, அவ்வாழ்க்கையின் வளர்ச்சிக்குரிய உபகாரங்களாவன:—ஊருணி, அறக்கூழ்ச்சாலை, கல்விச்சாலை, வைத்தியசாலை முதலியன செய்வித்தலும், ஜனசமூகத்தின் அறிவையும் செல்வத்தையும் பெருக்கற்குரிய வழியைத் தேடலும், தேசவிருத்திக்கு இடையூறானவற்றை விலக்க மு

யறனும் பிறவுமாம். இவ்வாறு உலகநடைக்கு வேண்டப்படும் உபகாரமே தெய்வப்புலவரால்'ஒப்புரவறிதல்' என்னும் அதிகாரத்தின்கீழ்க்கூறப்பட்டதென்க. பரிமேலழகியார், 'கண்ணோட்டத்துள்ள துலகியல்'என்னுங்குறளில்(கண்ணோட்டம்-உ)'உலகியல்'என்பதற்கு 'உலகநடை' எனப்பொருள்கூறி, 'உலகநடையாவது—ஒப்புரவுசெய்தல், புறந்தரல், பிழைத்தன பொறுத்தன்முதலாயின' என்று விரித்தலால், உயர்ந்தோர் ஒழுக்கம் என்னும் பொருளில்'உலகநடை'என்னுந்தொடர் வழங்காது 'உலகத்தின் நடைபேறு' என்னும்பொருட்கண்ணே அவர் வழங்குதல்கண்டுகொள்க. அன்றியும், "உலகநடையும் பழிப்புமல்லாத ஆன்றோரொழுக்கமாகலின்" எனவரும் தருக்க சங்கிரகதீபிகை வாக்கியத்தின்கண்ணே, சிவஞான முனிவர், உலகநடையை ஆன்றோரொழுக்கத்தின் வேறாகவைத்து வழங்குதலும் மேறகூற்றைவலியுறுத்துவதாகும். இவ்வுலகநடைக்குரிய உதவி, மானுடவியற்கைக்குற்ற முறையில் ஒருபடியாகநடைபெறுவதாயினும், அதனை மக்களிற்சிறந்தான் தன்பேராற்றலால் உலகிற்குப்புரியுஞ்சிறப்பையே திருவள்ளுவனார் எடுத்துரைப்பாராயினர். இவ்வொப்புரவு, பொருளான்மட்டுமன்றி, மனமொழி மெய்களாற் செய்யப்படும் எல்லாவுதவிகளையும் அடக்கிநிற்பதெனவறிக.

உலகவிருத்திக்குரிய ஒப்புரவு, அதனைச் செய்வானுமடங்க எல்லார்க்கும் இம்மையிலே பயனளிப்பதாகலின், அவ்வொப்புரவு மறுமை நோக்கியதன்றி இம்மைநோக்கியதெனவும், 'வறியராய் ஏற்றூர்க்கு மாற்றுதுதவும்' ஈகை, ஒப்புரவுபோல இம்மையிலேயே பயனளிப்பதன்றாதலால், அது மறுமைநோக்கியதெனவும் தம் நுட்பமதியால் ஆராய்ந்து, ஆசிரியர் பரிமேலழகர், ஈகையதிகாரத்தின் அவதாரிகையில் "ஈகை—மறுமை நோக்கியதாகலின், இம்மை நோக்கிய ஒப்புரவறிதலின்பின் வைக்கப்பட்டது' எனக்கூறுதல் ஈண்டுக் கருதத்தக்கது.

இனி, இவ் 'ஒப்புரவறிதல்' ஜனசமூகவாழ்விற்குரிய லோகோபகாரச் செய்கையையே குறிப்பதென்பதனை, அவ்வதிகாரத்துவரும் திருக்குறள்களைவைத்தும் ஆராய்வோம். அவ்வதிகாரத்தின் முதற்குறள்,

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு"

என்பது. மேகங்கள் நீரையுதவுதல் பிரதிப்பிரயோசனத்தைக்கருதி யில்லை யாதல்போல, அம்மேகங்கள் போல்வார் செய்யும் ஒப்புரவுகளும் கைம்மாறு கருதுவனவல்ல; என்பது இதிற் கூறப்பட்டது. ஜனசமூகவாழ்க்கைக்கு இன்றியமையாத பரோபகாரத்தை ஒவ்வொருவருங்கொண் டொழுகினாலன்றி, அவ்வாழ்க்கை நடைபெறாதாதலால் இக்குறளில் ஒப்புரவைக் 'கடப்பாடு' எனத் தெய்வப்புலவர் வழங்கினமை புகழத்தக்கது. இனி, எத்தகைய செல்வம் வலி முதலியவற்றை ஒருவன் உடையனாயினும், அவன் உலகவாழ்விற்குரிய இவ்வொப்புரவைக் கடைப்பிடியாது தனிநின்று வாழக்கருதின், அவன் உலகிற் செத்தவனேயாவ னென்னுங் கருத்து,

"ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்".

என்னுந் திருக்குறளிற் பயிறல் காண்க. இக்குறளில் ஒத்ததறிவான் என்பதற்குப் பரிமேலழகர் 'உலகநடையினை அறிந்துசெய்வான்' என்று பொருள் கூறினார். இனி, இவ்வொப்புரவு, ஈகை போல வறியார்க்கு மட்டுமன்றி, ஜனசமூகத்திற்கே பெரும் பயனளிப்பதாதலால்,

"ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் றிரு.

"பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வம்
நயனுடை யான்கட் படின்.

"மருந்தாகித் தப்பா மருந்தற்றாற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்"

என்னும் மூன்றுகுறள்களில், ஒப்புரவாளன் செல்வம் உபகாரப்படுஞ் சிறப்பு, தக்கவுவமான முகத்தால் விளக்கப்படுதல் அறியத்

தக்கது. ஊருணியும் பயன்மரமும் மருத்துமரமும் யாவர்க்கும் எக்காலத்தும் எளிதில் உபயோகப்படுதல் போல, ஒப்புரவாளன் செல்வமும் உபயோகப்படும் எனவே, ஜனசமூகவாழ்விற்குரியபொது நன்மையே தெய்வப்புலவர்கருதிய ஒப்புரவென்பது தெளிவாயிற்று.) "உலகவாம் பேரறிவாளன் திரு" என்னும் அருந்தொடரும் முற்கூறிய கருத்தையே வலியுறுத்துதல் உய்த்துணர்க. இனி, இவ்வொப்புரவு,செல்வத்தான் மட்டுமாவதன்று; மனமொழிமெய்களாற் செய்யப்படும் எல்லாவுதவிகளையும் குறிப்பதென்னுங்கருத்து,

"இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்.

"நயனுடையா னல்கூர்ந்தா னாதல் செயுநீர
செய்யா தமைகலா வாறு"

என்னுங் குறள்களில் அமைக்கப்பட்டதாம். இவற்றுள்முதற் குறளில் "செல்வமில்லாமை யொன்றானே ஒப்புரவு இழக்கப்படுவதன்று; அதனைச் செலுத்தும்வழி பலவாம்; அவ்வழியினை அறிந்து செய்யவல்ல இயற்கையறிவுடையார், செல்வமொன்றில்லாமைபற்றி அவ்வொப்புரவு செய்யத் தளரார்" என்னுங் கருத்தும், இரண்டாங் குறளில், "செயுநீர செய்யா தமைகலா வாறு" எனவே, ஒப்புரவு என்பது செல்வத்தான்மட்டு ஆவதன்று என்பதும் குறிக்கப்பட்டவாறு நோக்குவார்க்கு விளங்கும். இக்கருத்துப்பற்றியே "இனிச் செய்டத்தகுவன வற்றுள் எஞ்சிநின்றன இவ்வதிகாரத்திற் கூறுகின்றார்" எனப்பரிமேலழகரும் அவதாரிகையிற் கூறினர். இனி இவ்வதிகாரத்தின் ஈற்றுக்குறள்—

"ஒப்புரவி னால்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து"

என்பது. இவ்வருமைக்குறள் இவ்வதிகாரத்திற்கே ஓர் சிகாமணி என்னலாம். லோகோபகாரஞ் செய்யும் முயற்சியில், ஒருவனுக்கு வருவது கேடு என்பா ருண்டாயின், அக்கேடு, அவன் தன்னைவிற்றாயினும் பெற்றுக் கொள்ளுந் தகுதியுடையதாம் என்பது இதன் பொழிப்பு; என்றது ஒப்புரவுசெய்தலால் ஒருவனடையுங் கேடு கேடன்று, பேறென்று கருதத்தக்கது என்பதாம். இக்கருத்தையே

"கெடுவாக வையா துலக நடுவாக
நன்றிக்கட் டங்கியான் றாழ்வு"

என்னுங் குறளிலும் தெய்வப்புலவர் அமைத்தருளினர். தேசோபகாரமான காரியங்களை ஒருவன்செய்யுமிடத்துப்பொருட்கேடு மானக்கேடு முதலியன நேருமாயின், அவை அவ்வுபகாரியொருவற் கேயுறுந் துன்பமாயினும், அவன்செய்கையாலாம்பயன் உலகமுழுதுஞ் சார்ந்து இன்புறுத்தலால், அவ்வுபகாரி அக்கேடுகளைத் தைரியத்துடன் ஏற்று உலகத்தைக்காக்கப் பின்வாங்கான் என்பது. இவ்விடத்து, வைஷ்ணவருள் வழங்கும் ஓர் அழகிய சரித்திரம் ஞாபிக்கத்தக்கது. (விசிஷ்டாத்துவைதமதஸ்தாபகராகிய ஸ்ரீராமாநுஜாசாரியர், அருமபெறற் பொருளாகிய திருமந்திரோபதேசம் பெறவேண்டி, திருக்கோட்டியூர்நம்பிகள் என்னும் பெரியார்பக்கற் பலகால் நடந்தும் பெறாமல், பின்பொருகால் அந்நல் ஆசிரியர் உபதேசிக்க மனமுவந்து ஸ்ரீராமாநுஜரை நோக்கி, "யான் அடையப்பெறும் அரும்பொருளைப் பிறர்க்கறிவுறுத்தேன்; அறிவுறுத்தின் எரிவாய்க் கொடுநரகில் வீழ்வேன்' என நீர் ஆணையிட்டுத்தரின், அவ்வரும்பொருள் நுமக்குபதேசிக்கப்பெறும்' என்றுகூற, இராமாநுஜரும் அதற்குடம்பட்டு ஆணைதந்து திருமந்திரோபதேசம்பெற்றுத்திரும்பி, திருக்கோட்டியூர்க் கோயில் விமானத்தின்மேனின்று, அடியாரையெல்லாம் அழைப்பித்து, யாவருமுய்ய அவ்வுபதேச அருமபொருளையெல்லாம் கருமுகிலேகம்போலப் பொழிந்தருளினர்; இச்செய்திகேள்வியுற்ற நம்பிகள் இராமாநுஜரைக்கண்டு, "என்செய்தீர்! ஆணையைமிகுந்ததனால் நீர் அடையும் பிராப்தியாது" என்று கூற, "ஆசாரியாபசாரம் பண்ணின அடியேன் அடைதற்குரியது அக்கொடுநரகமே: ஆயினும் அடியேனால் அவ்வரும்பெறற்பொருளைப் பெற்ற ஆன்மாக்களெல்லாம் பரமபதப் பேற்றுக்குரியரானதைக் கருதும்போது அவ்வெரிவாய்நரகம் அடியேனால் விலைகொடுத்தும் பெறத்தக்கதன்றோ! அடியேனொருவனே துன்பமுறின் உறுக" என்றருளிச்செய்தார். நம்பிகள், இப்பெருந்தகையின் ஞானவிசேஷத்தைக்கண்டு வியந்து 'இத்தகைய அரும்பேரறிவை நாம் அடையப்பெற்றிலோமே' என்றிரங்கித் தம் செற்றமாறினர் என்பது லோகப்பிரசித்தம். இவ்வாறு, ஞானபாகத்திற்போலவே, ஜனசமூகத்திற் கின்றியமையாத பொது

நன்மைவிஷயத்தில் தம்மானக்கேட்டையும் பொருட்கேட்டையுஞ் சிறிதுமதியாது பாடுபட்டு, உலகவாழ்வை ஓங்கவைத்த உத்தமகுண சீலர்களை உலகசரித்திரத்தில் அங்கங்கே நாங்காணலாம். இவ்வுலகத்தில் அவ்வுத்தமமக்களின் தொகை சுருங்கியதாகவே யிருக்குமாயினும், அப்பெருந்தகைகளையுடைமையாற்றான் இவ்வுலகமும்நடைபெறுவதென்பது நாம் மறக்கற்பாலதன்று. பழைய செந்தமிழ்ச் சான்றோர்கள் இம்மக்களைப்பற்றிக் கூறுவன வருமாறு:—

"உண்டா லம்மவிவ் வுலக மிந்திரர்
அமிழ்த மியைவ தாயினும் இனிதெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென வாழா நோன்றாட்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே" (புறநானூறு-கஅ௨)

" பண்புடையார் பட்டுண் டுலகம் அதுவின்றேன்
மண்புக்கு மாய்வது மன் " (திருக்குறள்.)

இவ்வாறு, தெய்வப்புலமைத் திருவள்ளுவனார், தம் அருமைத் திருக்குறளில், ஜனசமூகவாழ்க்கைக்கு வேண்டப்படும் பொதுநன்மைக்கு "ஒப்புரவறிதல்" என்னும் பெயரிட்டு, அதனைப் பத்துக்குறள்களால் ஓரதிகாரமாகவைத்து விளக்கியருளிய மாட்சி உலகினராற் போற்றத்தக்கது. 'ஒப்புரவு' என்னும் பதத்தை இவர் வழங்கிக் காட்டியவாறே, நல்லிசைப் புலவராகிய ஔவையாரும் 'ஒப்புரவொழுகு' எனச் சுருங்கவுரைத்தருளினர். இவ்வொப்புரவு, பொதுவாக எல்லார்க்கும் பயனளித்தலால் முன்னர்க்கூறி, பின் வறியார்க்கே பயன்றரும் ஈகையைவைத்து, இவ்விரண்டானும் பெறற்குரிய புகழை இல்லறவியலின் ஈற்றில் வைத்து முடித்தருளியதும் நோக்கத்தக்கது. இனி,மேனாட்டிற்புகழ்பெற்ற பத்திராசிரியரில்ஒருவர்,இவ்வொப்புரவைப்பற்றிக்கூறிய அழகிய வார்த்தைகளோடு இவ்வியாசத்தை முடிக்கின்றேன்:—"நான் லோகோபகாரமே செய்வேன்; நான் செய்வது உலகத்துக்கு அளவற்ற பயனையளியாவிடினும், அதற்காக என்

ஊ உலகத்தார் மெச்சாவிடினும் என் வயதுமுதிர்ந்து என்னுயிர் நீங்கும்போது, நான் என்வாணாளை வீணாய்க்கழிக்கவில்லையென்ற மட்டிலும் என் மனச்சாட்சி எனக்குக் கூறுமன்றோ: அதுவே போதியது; லோகோபகாரமே செய்வேனாகுக.''

பத்திராசிரியர்.

---

உ

திருச்சிற்றம்பலம்.

# பெரியபுராண அரும்பதவிளக்கம்.

## தடுத்தாட்கொண்டபுராணம்.

(கஎசு) என்னளவில்மாத்திரம் இரவுபுலருந்தன்மைத்தன்று. மனமுந் தனமுமலரும். இப்பெருவாழ்வு தீவினையையுடைய என்னொருவேனளவில் மாத்திரமோ. நீவிர்பலருமெனக்குச்செய்யுந்துன்பமிதுவோ. கொன்றைமலரும் நிலவும் அலர்கின்றமுடி.

(கஎஎ) சுவாமிகளுக்கு மடியேனயருந்தன்மை திருவுளமோ- இதுதான் யானோவுறுமேவெனைக்கூட்டுக.

(கஎஅ) படிமேல்வர முன்பருள்வான் இப்பொழுது அருளும் வகையை ஆரறிபவர்.

(கஎகூ) பரவைக்குஆரூரன்பால் மணம்அணியது என்றருள. பரவைக்கருள எனமுடிக்க. அணியது-சமீபித்தது.

(கஅ0) கழிபோம்யாமம்:கழிந்து போம்யாமம்:கடையாமமென்றபடி. காவற்றுணையாகிய சிவபிரானுடைய திருவருளைத்தொழுது; சேமநிதிபோன்ற துணையுமாம்.

(கஅக) தேமணிறைந்த ஈர்க்கிடைபுகப்பெறாது ஒன்றோடொன்று புணர்ந்த முலைமலையின்சிகரமே பற்றுக்கோடாகச் செய்கின்ற

யோகத்தைப் பரம்பரையாகப் பலநாளும் விரும்பினார். யோகம்-புணர்ச்சி. பரம்பரை-மேலும் மேலும், அல்லது நாளுக்குநாள். மலைக்கு வடேபற்றுக்கோடாக யோகிகள் யோகத்தைப்பரம்பரையாகப் பலநாளும் விரும்புமாறுபோல விரும்பினாரென ஈற்றடியை இரட்டுறமொழிந்து கோடற்குப் போகமென்னாது யோகமென்றார். பூர்வஜன்மத்திலிவர் பரம்பரையாகப் பலநாளும் யோகத்தைவிரும்பியவாறுபோல என்றுமாம். இவர்சிவஞானியாகலின் இவருக்கு இப்போகம் யோகம் எனஅமைத்தலுமொன்று.

(கஅரு) தெற்றியுமாகிய இவ்விடங்களிலுள்ளகுளிர்ந்தமுத்துப்பந்தரின்கீழ்ப்பொருந்திய செழிய ஆசனத்தினின்றிழிந்து; இனித்தெற்றியாகிய இவைகளிலிருந்து தவிசினின்றிறங்கி என்றுமாம்.

(கஅச) சந்தனக்குழம்போடு தோய்ந்தகுங்குமக்கலவை. சுழியம்-ஓர்வகை யாபரணம்.

(கஅரு) கையினிலலங்கரித்த பொற்செண்டும். இவ்வையனுக்கிவையெல்லாமழகையுடைத்தாமென்றாராய்ந்த ஆபரணத்தை (அணிந்த) மகளிர் துதிக்க; இம்மணக்கோலமையனுக் கழகாமென்று வீதியிற்கண்ட ஆயிழையையுடைய மகளிர்புகழஎன்றலுமாம். நீறுமாகிய சைவக்கோலந்தழைப்பவும், போற்றவுஞ்சார்ந்தார்.

(கஅஎ) கையிற்கொண்டு திரிந்துவளர்க்கின்ற ஆட்டுக்கிடாசிவல்-காடை. பயில்மொழி-குறிப்புமொழி. பிடகை-பூங்கூடை.

(கஅஅ) பொன்னாலாகிய கலனையையுடைய குதிரையைப்பண்ணுறுத்தி. விளங்குகின்ற ஒளியையுடைய வாகுவலயத்தையணிந்த அழகியபுயங்களுக்கிடையிடையேநெருங்கி மாலையினது நிழல்சூழ.

(கஅகூ) மேலிடம் பந்தர்போலச்செய்யப்பட்டிருத்தலின் மண்டபத்தைக் காவணமென்றார். இவர்க்குயானடியேனாகப் பரமர்பண்ணுநாள்.

(ககூ0) அவர்என்றது-சுந்தரமூர்த்திநாயனாரை. அவர் எதிரே தரிசிக்கவும் தாந்தரிசிப்பிக்கவும் எதிரேதோன்றி நிற்ப.

(ககூக) மறைவண்டு-வேதமாகியவண்டு. ஆன்மநாயகரே தேவரீருடைய மரைமலர்போன்ற பாதங்களானவை வேதமாகிய

வண்டுசூழ்ந்து அன்பருடையமனமாகிய தடாகத்திலலர்கின்ற செந்தாமரைப்பூக்களாம். அங்ஙனமரியவை நல்லபரமானந்தமாகிய மதுவை நாயினுங்கடையேனுகிய என்னளவிலுந்தந்து எதிரே நின்றன.

(ககூஉ) கறுத்தல்-கோபித்தல். சீலமாக- மிருதுவாக. கறுத்தன-சிவந்தன. என முரணலங்காரம்.

(ககூந) உ-ம்வரி-ஆசாரியரான் மலநீக்கஞ்செய்யப் படாதவரையும் மலநீக்கஞ்செய்து மோக்ஷத்தைக்கொடுப்பன.

(ககூச) வேதசிரசுகளாகிய உபநிடதங்களின் மேலிவர்வன. ஆரணம்-உபநிடதம்.

(ககூரு) ஏறுசேவகனுர் - எவரினுமுயர்ந்தவீரர்; ஏற்றையுடைய வீரருமாம். நிலையானசிறப்பையுடைய அடியார்களது வழித்தொண்டை அறியப் போதத்தைக் கொடுத்து.

(ககூசு) பேணல்-தியானித்தல். அன்போடின்பத்தை அநுபவிப்பவரென்றுமாம். இருமை-நன்மைதீமை.

(ககூஎ) நீதி-ஒழுக்கம்.

(ககூஅ) இன்னபிரகாரம் இன்னகுணமென்று துதிப்பேன், இதற்கு நான் அபாத்திரன்.

(உ00) ஆரூர்மன்னவர்-வன்மீகநாதர்.

(உ0உ) பெறவும்,ஏத்தவும். தமிழ்மாலையாகிய திருத்தொண்டத் தொகைப்பதிகம். அவர்-திருக்கூட்டத்தவர்.

(உ0ந) தமிழ்-திருத்தொண்டத்தொகை.

---

## தில்லைவாழந்தணர்சருக்கம்.

### தில்லைவாழந்தணர்புராணம்.

(க) எவற்றிற்குமுதலாகி, நடுவுமாகி, அளவிடற்கரியஅளவுமாகி, ஒளியாய், அறிவுமாகி, காணப்பட்டபொருளுமாகி, பேதிக்கப்படாத ஏகவஸ்துவுமாகி, பெண்ணுமாகி, ஆணுமாகி, ஞானத்தைப்

போதித்துநிற்கின்ற சிதம்பரத்துள்ள கனகசபையில் நடராஜர் செய்தருளும் திருநடனம் நம்மால் துதிக்கப்படுவது துதிக்கப்படுவது. பேதியா ஏகமாகி-ஏனையவரைப்போல ஒன்றினின்றுதோன்றாத ஏகமாகி.

(உ) கற்பனைகளைக்கடந்தசோதியானது, கிருபையே வடிவமாகி, அதிசயத்தைவிளைவிக்கின்ற அழகுமிகுந்து அரியவேதசிரத்தின் மேலாகும் ஞானாகாயமாகிய திருச்சிற்றம்பலத்தினின்று அழகோடு நடனஞ்செய்தருளுகின்ற தாமரைமலர்போலுந்திருவடிதுதிக்கற்பாலது துதிக்கற்பாலது.

(ங) பெருமைபொருந்திய தில்லைவாழந்தணர்களைத் துதித்து அவர்களுடைய திறத்தைச்சொல்வேன். இவ்வாறன்றி நடேசருடைய பாதங்களைத்துதிசெய்து, தில்லைவாழந்தணர்களுடைய திறத்தைப்புகலலுற்றேனென்றுமாம். நன்மையைப்பேணிவாழும் முறைமையையுடையவர். அடியையடைதல் வேண்டுமென்னுந்தவம்.

(ச) பொலிகின்ற அருட்செல்வத்தினுளுயர்ந்த அழகையுடைய விபூதிருத்திராக்ஷங்களாகிய ஆபரணங்களைத்தாங்கி; மிகுகின்ற மணிபொன் என்னுமிவற்றானீடுகின்ற அழகையுடைய ஆபரணங்களைத்தாங்கி என்றுமாம். மங்கலகிரியைகளைச்செய்து. மங்கலகிரியை ஆடையாபரணஞ்சாத்துதன் முதலியன. அகம்படித்தொண்டு - அகத்தொண்டு. பொங்கியதிருவினீடும் பொற்புடைப்பணிகள் என்பதற்கு-மிகுகின்ற அருட்செல்வத்தைப்போலப் பெருமைமிகுகின்ற அழகையுடைய திருத்தொண்டுகளெனினுமாம்.

(ரு) அருளால்-தம்முடைய அருளோடு. தத்துவநெறி-உண்மைவழி.

(சா) ஒருவன் உறுதற்பாலது விபூதியின்செல்வமே எனமதிக்கும் மனத்தில் மேம்பட்டார். பெறுதற்பாலது சிவன்பாலன்பாம் பேறே எனப்பெருகிவாழ்வார்.

(எ) தென்றிசையிலுள்ளதமிழின்பயனாகிய திருத்தொண்டத்தொகையை முன்னரேபாடுதற்கு முன்னாளில் வன்றொண்டரையடிமை கொண்ட வன்மீகநாதர் முன்னமே "தில்லைவாழந்தணர்தமடி

யார்க்குமடியேன்" என அப்பதிகத்தில் முதலில் வைக்கப்பட்ட பொருள் அவர்களேயானல் அவர்களது பெருமை எம்மாலியம்பலா மளவிற்றே.

(கo) தவம்-தொண்டு.

---

## திருநீலகண்டநாயனார்புராணம்.

(க) தில்லைவாழந்தணர் வசிக்கின்ற பழையஊராகிய சிதம்பரத்திலே, குயவர்குலத்திலேயவதரித்தவர். உமாதேவியை யொரு பாகத்திலே நோக்கி.

(உ) மெய்யன்பு ஆம் அடியார்கட்கு.

(ங) தங்குலவாழ்க்கைக் கேற்ப அளவிறந்தபட்பாண்டங்களைச்சீவனத்தின் பொருட்டு வனைந்து. அதனோடு சிவனடியார்க்கு ஓட்டைவனைந்து கொடுத்தொழுகுங்காலத்து இளமைப்பருவம் முதிரச் சிற்றின்பத்துறைக்கு எளியவரானார்; சிற்றின்பவசப்பட்டார் என்பது கருத்து.

(ச) ஐயர் நஞ்சையுண்ண, கண்டமாகியதான், யான்செய்தவ நின்றுதடுத்தாற்போலத் தடுத்துத்தரித்துக் கொண்டதென்று. தான் என்றது கண்டத்தை.

(ரு) உடனுறைவு-புணர்ச்சி.

(சா) வேண்டுவனவற்றை. திருநீலகண்டத்தின் மேலாணை யென்றார்.

(எ) ஆணைகேட்டபெரியவர் ஆதியாரது நீலகண்ட மொன்றிற்றுங்கொண்ட விருப்பம்பேதியாமல், அம்மனைவியாரைப் பிறர் மனைவியைப்போல நோக்கி, அம்மனைவியார் முன் "எம்மை" எனப் பன்மையாற்கூறினமையால், மற்றைப் பெண்களையும் மனத்தினாலுந் தீண்டேனென்றார். ஆர்வவளவு எனக்கூட்டினும் பொருந்தும். பேதியாமல்-வேறுபடாமல்.

(அ) அழகுமிக்கதமதுசரீரம் நாயகர்சரீரத்திலே படாமல். போற்றி-பேணி.

(கூ) தாமிருவருமாத்திரம் அறியநின்ற ஆணையைப் பேணி. அன்புதம்பிரான் திறத்துச்சாயார்-அவ்வாணையைக்கடவார்.

(கo) விளக்கங்காண-சோதிக்க.

(கக) கீள்-இலங்கோடு. இலங்கோடு கௌபீனமாவது அரைஞாணோடு நெய்தகோவணம். இலங்கோடு, கோவணத்தோடு சேர்த்து நெசவுபண்ணிய அரைஞாணுக் கொருபெயர். திருமுண்டம்-திரிபுண்டரம்.

(கஉ) பம்பை-சுருண்டமயிர்.

(கச) ஆகமங்களிலே அடியார்களை வழிபடுதற்குச் சிவபெருமான் கூறியபூசைகளை; ஆகமங்களின்வழிஉண்டாகச் சொல்லப்பட்ட பூசையென்றுமாம். முறையை முறைமையென்றார், "மும்மைத்தமிழ்" என்றதுபோல. முறை-புத்தகம்.

(கரு) வள்ளலதுதொண்டனார். நம்பிவைத்தும் - நம்பிவைப்பேம்.

(கசு) என-என்றுசொல்ல.

(கஎ) காப்புஉறுமெல்லை-காவல்மிக்கஇடம்.

(கஅ) உய்த்து-நடத்தி; ஏழடிபின்சென்றென்றகருத்து.

(கக) குறியிடம்-குறித்தவிடம்.

(உo) சுவாமீ யடியேங்களை மனத்தின்கட்பொருட்படுத்தருளியது எங்கள்செய்தவமென்று கூறிநிற்க. தந்துநில்-தந்து பின்புநில்; விரைவிற்கொடு என்றகருத்து. நில்-விரைவின்கட்குறிப்பென்பாருமுளர்.

(உஉ) இறையில்-இறைப்பொழுதினுள்.

(உங) இழையினூற்புனைந்தமுப்புரிநூல். வைத்த இடத்தினும் வேறிடத்தினும். பழைய அவ்வோட்டினும்பார்க்க நல்லபுதிய ஓட்டைத்தருவேன்.

(உச) போற்ற-காக்க.

(உரு) சாலநீடு செல்வது-மிகநெடுங்காலத்துக்கிருக்கத்தக்கது.

(உசு) பாவகம்-பாசாங்கு, நடிப்பு. பாவமெனினுமமையும். ஒன்றும்-சிறிதும். வளைத்து-சுற்றிப்பிடித்து.

(உஎ) என்னசெய்யவேண்டும்.

(உகூ) கங்காநதியைமுன்மறைத்தசடையை இப்போது தாம் மறைத்து.

(௩௦) யான்முன்றந்தவோட்டை எனக்குத்தராமல் நீர்கவர்ந்து கொள்ளாமைக்கு; தாராதுஎன்னும் வினையெச்சம் கொள்ளாமையென்னுமெதிர்மறைவினையின் கொள்ளென்னும் பகுதியோடுமுடிந்தது.

(௩க) நின்றாரும் போனாருமாகிய அந்தணர். எல்லையிலான்-கற்பனாதீதர். பெருந்தொண்டராகிய திருநீலகண்டநாயனாரும். வழக்கு நிமித்தம்.

(௩உ) நந்தொழியான்-தந்துவிடான். கெடுத்தானேல்-இழந்தானானால்.

(௩௩) நிறை-சால்பு.

(௩௪) இதுஎன்றது ஓட்டை. இடம்விட்டுமறைந்தது. தூரத்திலும்.

(௩ரு) மனைவியாரைத் தீண்டாமையை அச்சபையிற் சொல்லமாட்டாராய்.

(௩எ) சிவயோகியார்முன்னேசெல்ல. புனைமணி- அலங்கரித்த அழகு. புக்கார்-குளத்துள் இறங்கினார்.

(௩அ) முண்டம்-நெற்றி. கூடாமைக் கேதுவாகியபண்டைத் தஞ்செயல்களை.

(௪௦) காணுமதிசயம்-காண்கின்ற அதிசயம். நின்றார்-வினையாலணையும் பெயர். துன்னிய-துன்ன; வரஎன்றபடி. துணையுடன் விடைமேற்றுன்னியகண்டார்.

(௪௧) காதலால். விண்டுவிடையின்மேல் அரும்பொலிவுகாட்டி வருவார்தம்மை; விண்டு-விட்டுணு. விண்தரும் பொலிவுகாட்டியாகிய விடையெனினுமாம்; வெண்ணிறத்தின் பொலிவையுடைய விடை யென்பது இப்பொருட்குக்கருத்து.

(௪௨) சென்று, அவ்வடியவரது நிலைமையைக்காட்டுந் தேவர்கடேவர்.

(௪௩) விறல்-வைராக்கியவலி.

(௪௪) பூம்புகார்-காவிரிப்பூப்பட்டினம்.

(இன்னும் வரும்.)

---

## ஓர் பிழைதிருத்தம்.

---

செந்தமிழ்த் தொகுதிநான்கின், பகுதியெட்டில், பெரியபுராண அரும்பதவிளக்கத்துத் தடுத்தாட்கொண்டபுராணத்தின் (௧௨௩)ம் செய்யுள்விளக்கத்தில "அந்நாயனுருக்கு அந்நியராயிருக்கின்றகடவுள்" என்றிருப்பதை "அந்நாயனுருக்கு அநந்நியராயிருக்கின்றகடவுள்" என்றுதிருத்திக்கொள்ள வேண்டுகிறேன்.

ஜி. சதாசிவம்பிள்ளை.

நாகை "நீலலோசனி"ப்பத்திராதிபர்.

# நல்லொழுக்கம்

## 2-வது அதிகாரம்.

(சஉச-ம் பக்கத்தொடர்ச்சி)

[ஸ்ரீ: இலக்ஷ்மணப்போற்றிகள் மொழிபெயர்த்தது.]

"ஆகவே, நம்முடைய நிலைமையை நாமே உண்டாக்கிக்கொள்ளுகின்றோம். இவ்வாறு பொருள்களின் உண்மைகளை அழுந்த உட்கொண்டு, உறுதியாய் விவேகிகளாவோம்."——உவர்ட்ஸ் உவர்த்.

"ஓர் யந்திரத்தின் பிரதான உட்கருவியை அசைக்கிற திரிகை யந்திரத்துக்கு ஆதாரமாகிய நீரோட்டமானது அந்தரங்க ஸ்தலத்தில் உற்பத்தியாகிறது போல, உலகத்தில் முக்கிய ஸ்தானத்தைப் பற்றி நடத்துகிறமனிதர் தனித்த ஒடுக்கங்களில் ஜனிக்கின்றனர்"—— 'ஹெல்ப்ஸ்.'

மாடம் - காம்பன் என்பவளுடன் சம்பாஷிக்கையில், நெபோலியன் போனபார்ட் என்பவர் 'பழைய போதனைமுறைகள் யாதொருபயனுமற்றனவாகத் தோற்றுகின்றன; ஜனங்களைச் சரியானபடி கற்பித்தற்கு வேண்டுவது யாது?' எனக் குறிப்பிட்டு வினவினர். 'தாய்மார்கள்' என்பது மாடம்காம்பன் என்பவளுடைய விடையாயிற்று. அவ்விடையானது சக்ரவர்த்திக்கு வியப்பை உண்டாக்கவே, அவர் 'ஆம், ஒரேமொழியில் தங்கிய ஓர்வகை போதனைமுறை இதோ இருக்கின்றதே. அங்ஙனமாயின் தாய்மார் தங்கள் மக்களைக் கற்பிக்குமுறையை உணர்ந்து கொள்ளுமாறு அவர்களைச் சிக்ஷிக்கவேண்டிய கவலை உமதேயாகுக என்று செப்பினர்.'—எய்மி, மார்ட்டின்

"இறைவனே! எவ்வளவு கவலையுடன் நீர் எங்களைச் சூழ்ந்திருக்கிறீர். பெற்றோர்கள் பிரதமத்தில் எம்மைப்பண்படுத்துகின்றனர். அப்பால் வித்யாபோதகர் எமக்கு நியாயப் பிரமாணங்களை விளக்குகின்றனர்; அதனால் விவேகஞானத்தின் விதிகளுக்கு உட்பட்டவராகின்றனம்"——ஜார்ஜ் ஹெர்பேர்ட்.

ஒழுக்கத்தைப்பயிற்றுவதற்கு முதன்மையும் மிகமுக்கியமுமான ஸ்தலம் இல்லமேயாம். ஆண்டே, ஒவ்வொருவரும் சிறந்த நல்லொழுக்கத்தையோ அல்லது இழிந்த தீயொழுக்கத்தையோ பழக்கிக் கொள்கின்றனர். ஏனெனின், அவ்விடத்திற்றான், தன் கூடவே தங்கிநின்று தன் உயிருடன் மாத்திரம் ஒழிவடைகின்ற ஒழுக்க நெறியை உணர்வானாகின்றனன்.

உலகாசாரங்கள் ஒருவனை மனிதனாக்குகின்றனவென்பது ஓர் பழமொழி; "மனசானது ஒருவனை மனிதனாக்குகின்றது" என்பது மற்றோர்பழமொழி; ஆனால் இவ்விரண்டையும்விட "இல்லமே ஒருவனை மனிதனாக்குகின்றது" என்பது மிகவாய்மையுற்றதோர் மூன்றாவது முதுமொழி. ஏனெனில், வீட்டுச் சிக்ஷையானது உலக ஆசாரத்தையும் மனசையுமட்டோ! ஒழுக்கத்தையும் தனக்குட்படுத்துகின்றது. மனம்நெகிழ்ந்து, வழக்கங்கள் உருப்பட்டு, புத்திகிளர்ந்து, ஒழுக்கம் நன்று அல்லது தீதாகச்சமைவது பெரும்பாலும் வீட்டிற்றான்.

ஜனசங்கத்தை நடத்தும் விதிகளும் முதுமொழிகளும் தூயனவோ, தீயனவோ அந்த மூலஸ்தானத்தினின்றே ஜெனிக்கின்றன. அரசரின் சட்டமுங்கூட இல்லொழுக்கத்தின் பிரதிபலனமேயாம். வீட்டிற்குழந்தைப்பருவத்தில் மனசில்வித்திய மிகச்சிறந்த கருத்தின் இலேசங்கள்தாம், பிற்காலத்தில் வெளியுலகில் வளர்ந்து வெகு ஜனங்களின் நன்மைக்கு உரியனவாகப் பலிக்கின்றன; ஏனெனின் ஒவ்வொரு வீட்டினின்றுங் கூடிய ஜனங்களே ஜாதியாராவர். குழந்தைகளை நடாத்துங் கயிற்றைக்கைப்பற்றியவர்கள், அரசையாளுஞ் சூத்திரத்தைப் பூண்டவரினும் அதிகவல்லமையைச் செலுத்துகின்றனர்.

ஜனசங்க ஒழுக்கினுக்கு இல்லொழுக்கமே உபகாரக்கருவியாதலும்,மனசும் ஒழுக்கமும் முதலில்வீட்டில் உண்டாதலும் பிரகிருதியின் முறைமையாகின்றன. பின்னர் ஜனசங்கத்தின் அங்கமாகின்ற ஒவ்வொருமனிதரும் ஆண்டே ஒவ்வொரு செய்கையிலும் நடைபெற்று ஒன்றன்பின்னொன்றாய் உருப்படுத்தவேண்டியவராகின்றார். அவர்

கள் குடும்பத்தினின்றும் உலககாரியத்திற் புகுகின்றனர். பைய ஞம் நிலைமையிலிருந்து நகரத்தையாளும் நிலைமையடைகின்றனர். இவ்வாறு வீடானது நாகரீகத்திற்கு மிகமுக்கியமான பள்ளியாக மதிக்கப்படும். ஏனெனின், முக்கியமாய் நாகரீகமானது முடிவில் தனித்தனி மனிதனுடைய பழக்கத்தைப்பொறுத்ததாக ஏற்படுகின்றது. ஜனசங்கத்தின் ஒவ்வொருவரும் இளமையிற் பழகிய நல்லொழுக்கு, தீயொழுக்கினுக்குத் தக்கவாறே, அவர்கள் நிறைவுற்ற ஜனசங்கமும் ஏறக்குறைய மனிதவியல்பும் நாகரீகமும் பொருந்தியதாகும். மிக்க ஞானசீலமுள்ளோருள்பட எந்த மனிதனுடைய பழக்கமும், அவனுடைய இளம்பருவத்தில் அவனைச்சூழ்ந்திருந்த சன்மார்க்கருடைய விசேஷசக்தியின் வயப்பட்டேதீரும். அவன்சடத்தையும் அறிவையும்வளர்த்தற்குத் தன்னுதவியின்றித்தன்னைச்சூழ்வுற்றவரை முற்றும்சார்ந்தவனாகவே உலகத்தில் புகுகின்றனன். அவன் முதலில் உச்சுவாசம் செய்ததுமுதலே கற்கபபுகுகின்றனன். ஓர் தாயானவள் ஒரு குருக்களிடம் சென்று நான்குவயதாயிருந்த தன்குழந்தையைக் கற்பிக்கத்தொடங்கும் காலம் எதுவென்று கேட்க அவர் "அம்மா நீ முன்னரே தொடங்கியிராவிடில் அந்தநான்கு வருடங்களையும் இழந்தவளாகின்றாய்; ஓர்சிசுவின் முகத்தில் விளங்கும் முதற்புன்னகைமுதல் உனக்கு அப்பருவம் தொடங்குகின்றது" என்று விடுத்தனர்.

ஆனால், இந்த விஷயத்திலுங்கூட, கற்கையானது முன்னரே தொடங்கப்பெற்றது. ஏனென்றால் குழந்தையானது முயற்சியின்றிப்பெரும்பாலும் தோலின்துவாரங்களின்வழியே கண்டு பாவனையாலேயே கற்கின்றது. "ஓர் அத்திமரத்தைக்காணவே, மற்றோர் அத்தியானது பலமுள்ளதாகின்றது" என்று அரேபியன் பழமொழி ஒன்றுண்டு. குழந்தைகள் விஷயத்தும் அவ்வாறே. முன்மாதிரிதான் அவர்களுக்குப் பெரிய பிரதமஆசிரியன்.

குழந்தையின் ஒழுக்கம் உண்டாதற்கு உபகாரப்படுகிற கருவிகள் பார்வைக்கு அற்பமாயினவெனினும், அவைகள் வாழ்நாள்முழுதினும் நிகழ்கின்றன. (தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் என்றபடி) குழந்தைப்பருவத்தின் ஒழுக்கமானது மனிதப்பருவத்தின்

ஒழுக்கத்திற்கு வித்தாக விருக்கின்றது. பிற்காலப் பயிற்சியனைத்தும் மேற்பூச்சுத்தான். படிகத்தின் உருவம் மாறுதலின்றியே இருக்கின்றது. இவ்வாறே 'குழந்தையானது மனுஷனுக்குத் தந்தையாகின்றது' என்றகவியின் கூற்றுப்பெரும்பாலும் ஒத்திருக்கின்றது; அல்லது மில்ட்டன் சொல்லுமாறு "காலைப்பொழுதானது அத்தினத்தின் இயல்பைக்காட்டுவதுபோல, குழந்தைப்பருவமானது மனிதனுங்காலத்தினியல்பைக் காட்டுகின்றது" நம்முடன் நெடுநாளைக்கு நின்று ஆழவேரூன்றி நம்நடத்தைக்குத் தூண்டுகருவியாயுள்ள குணங்கள், எப்பொழுதும் நம்பிறப்பின் சமீபத்திலேயே உற்பவித்திருக்கின்றன. நம்வாழ்நாளினுக்குரிய ஒழுக்கத்தை நிதானிக்கிற சற்குணம் அல்லது துர்க்குணம், உணர்ச்சி அல்லது மனக்கொள்கைகளுக்குரிய மூலங்கள், முதலில் ஊன்றப்பெற்றதும் அக்காலத்திலேயாம்.

குழந்தையானது ஓர் புதிய உலகத்தின் வாயிலில் இடப்பட்டதுபோலிருக்கின்றது. புதுமையும் வியப்புநிறைந்த எல்லாப்பொருள்கள்மீதும் தன்கண்களைத் திறக்கின்றது. முதலில் பொதுநோக்காகக் கண்விழிப்பதில் அமைகின்றது: ஆனால் வரவர ஒன்றைப்பார்க்கவும், கவனிக்கவும், ஒற்றுமைபார்க்கவும், அறியவும், மனதிற்பட்டபாவனைகளையும் கருத்துக்களையும் திரட்டிக்கொள்ளவும் தொடங்குகின்றது. விவேகத்துடன் நடத்தப்படின் அது அடையும் தேர்ச்சியானது உள்ளவாறே ஆச்சரியமுள்ளதாயிருக்கின்றது. ஓர் குழந்தையானது ஜடஉலகத்தையும் தன் சொந்தசக்தியையும் பிறசரீரங்களின் இயல்பையும், அதுமட்டோ, தன் சொந்த மனதையும் பிறர்மனதையும்பற்றிப், பிந்திய தன் ஆயுண்முழுவதில் அறிவதினும் ஒன்றரைவயசுமுதல் இரண்டரைவயசுக்குள், விசேடமான அறிவைப்பெறுகின்றது என்று பிரௌகாம்பிரபு சொல்லியிருக்கிறார். இக்காலத்தில் ஓர் குழந்தை திரட்டிக்கொள்கிற அறிவும் அதன் மனசில் உண்டாகிற கருத்துகளும் மிகமுக்கியமானவைகள். ஏனெனின் அவற்றைப் பிற்காலத்தில் மறப்பித்ததாக நாம் உத்தேசித்துக் கொள்ளக்கூடுமானால், கேம்பிரிட்ஜில் சீனியர்ரேங்ளெர் பட்டம்பெற்றவனாவது ஆக்ஸ்போர்டில் முதல் வகுப்புப்பட்டம் பெற்ற

வனுவது கற்றகல்வியனைத்தும் ஒன்றுமற்றது போலாகும். ஒரு வாரங்கூட அவனை ஜீவித்து வாழும்படி செய்யமுடியாது.

மனசானது எதிர்ப்பட்ட விஷயங்களை வகிப்பதற்கு மிகவும் இடங்கொடுத்து, தன்னிடத்தில் பற்றும் முதற்கருத்தால் மூளத்சுகுதியாயிருப்பது குழந்தைப்பருவத்தேதான். அக்காலத்தி லக்கருத்துகள் விரைவிற் பற்றுண்டு நிலைத்துத் தங்குகின்றன. இவ்வாறு ஸ்காட்என்பவர், தான்றானே வாசிக்கக்கற்றதற்கு நெடுநாளைக்கு முன்னரே, அவருடையமாதாவும் பாட்டியும் பாடுவதைக் கேட்டதினின்றும் அவருக்கு 'பாலடு' என்னும் கவிபாடுவதில் முதலில் விருப்புண்டானதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. குழந்தைப் பருவமானது முதலிற்புலப்பட்ட வடிவங்களை பின்வாழ்நாளிற் பிரதிபலிக்கச்செய்கிற ஓர் கண்ணுடியை நிகர்க்கின்றது. முதலிற் புலப்பட்டபொருளானது குழந்தையுடன் என்றும் நிகழ்கின்றது. முதல் இன்பம், முதற்றுன்பம், முதல்வெற்றி, முதற்றோல்வி, முதற்சித்தி, முதற்றவறு ஆகிய இவைகள் அதன் வாழ்நாளின் முகப்பில் பதிவுறுகின்றன.

இக்காலமுழுதினும், ஒழுக்கத்தின் பயிற்சியானது, மனிதஜாதியின் பின்வாழ்நாளின்இன்பத்திற்கு விசேஷசாதனங்களாய் நிகழ்வுறும் பண்பு, சித்தம், பழக்கமாகிய இவைகளைப் பக்குவப்படுத்துவதில் உறுகின்றது. மனிதன், தன்னைச் சூழ்ந்தவற்றின் சார்பின்றியும் அவற்றின் வயப்படாதும் தன்சொந்தஅறிவின் விருத்திக்குத் தானேகர்த்தாவாகித் தானே தனக்கு உதவிபுரிந்து கொள்ளத்தக்க ஆற்றலை ஒருவாறு அருளப் பெற்றிருப்பினும், குழந்தைப்பருவத்தில் அவனை நல்லொழுக்கத்தே நாடுங்கருத்தை உடையவனுக்கல் மிகமுக்கியமானதாகின்றது. மேலான கருத்துள்ள ஓர் தத்வஞானியை நித்யசஞ்சலமும் தீயொழுக்கமும் இழிதகைமையுமுள்ளவர்மத்தியில் வைப்போம். அவன் தன்னறியாமலே மிருகத்தன்மையிற் சார்ந்துவிடுவான். அத்தகைய சங்கத்தில், கண்டதை ஏற்பதும் தன்னுதவியற்றதுமான ஓர் குழந்தையானது எவ்வளவிற்கு எளிதில் வசப்படத்தக்கதாகும். திருத்தமின்மையும் துன்படுத்தலும் அசுத்தமுமுள்ளவர்களின் கூட்டத்தில், தீமைக்குநாணி மனசிலும்

அந்தரங்கத்திலும் தூய்மைபெற்ற தயாசுபாவத்தை வளர்த்தல் முடியாது. இவ்வாறே புத்தியறிந்த ஆணாகவும் பெண்ணாகவும் வளரப்பெறும் குழந்தைகளுக்குப் போஷகஸ்தலமாகிய வீடுகள், அக்குடும்பத்தலைவரின் திறமைக்குத் தக்கவாறு நன்றாகவேனும் தீதாகவேனும் இருக்கும். அன்பும் கடமையுமாகிய குணங்கள் வியாபித்து, புத்தியும் தயாசித்தமும் விவேகத்துடன் பிரவிர்த்தித்து, நித்தியஒழுக்கமானது யோக்கியமும் சற்குணமும் வாய்ந்து, விவேகத்துடனும் பக்ஷத்துடனும் அன்புடனும் நடத்திவரப்பட்ட குடும்பங்கள் உளவாயின், அக்குடும்பங்களினின்றும் சௌக்கியமும் உபகாரமும் சந்தோஷமுமுள்ள குழந்தைகள் உற்பவிக்கக் காணலாம். அவர்கள் தங்கள் பெற்றோர் பற்றிய நெறியைப் பின்பற்றுதற்கமைந்த பலத்தைப் பெறுவதால், யோக்கியமாய் நடக்கவும், விவேகத்தால் தங்களைத்தாங்களே வசப்படுத்திக்கொள்ளவும், தங்களைச் சூழ்ந்துள்ளவர்களுடைய நன்மைக்கு உபகாரப்படவும் தக்கவராகின்றனர்.

மற்றப்படி அறியாமை, திருத்தமின்மை, தன்னயம்பாராட்டலாகிய குணமுள்ளோரால் சூழப்பெற்றால் அவர்கள் தன்னறியாமலே அதேகுணத்தைப்பெற்று முதிர்பருவம்வரை அறிவின்மையும் கல்வியின்மையும் உள்ளவராகியும், நாகரீகவாழ்வு எனப்படுவதின் பற்பல மனக்கவர்ச்சியின் மத்தியில் வைக்கப்பட்டால் எல்லாவற்றினும் அதிகமாய் ஜனசங்கத்திற்கு அபாயகரமானவராகியும் வளருவார்கள். ஓர் கிரீக் பூர்வீகர் சொல்லுகிறார். அதாவது "உன்னுடைய குழந்தையை ஓர் அடிமையிடம் கற்பிக்க விடுவையேல் ஓர் அடிமைக்கு இரண்டு அடிமை உனக்குக் கிடைக்கும்" என்பதாம்.

குழந்தையானது தான் பார்த்தபடி நடவாதிராது. ஒவ்வொன்றும் அந்தக்குழந்தையின் நடை உடை பாவனை பேச்சுவழக்கம் ஒழுக்கங்களுக்கு முன்மாதிரியாக நிகழ்கின்றது. "ஏனெனின்" ரிச்டர் என்பவர் சொல்லுகிறார் "ஓர் மனிதனுக்கு ஜீவகாலத்தில் முக்கியபருவமானது மற்றவர்களுடன்கூடி அவர்கள் குணத்தையேற்று அப்படித்தானும் ஆகத்தொடங்குகிற குழந்தைப்பருவமேயாம். ஒவ்வொரு புதிய ஆசானும், முந்தினதிலும் குறைந்த பயனைத்தான் உண்டாக்குவான். கடைசியில் இவ்வாழ்நாளனைத்தையும் ஓர் கல்வி

பயிலும் இடமாக வைத்துக்கொள்வோம். அப்படியானால் பூப்பிரத க்ஷணம் செய்த கப்பற் பிரயாணியானவன் தான் சந்தித்த ஜாதியார் அனைவராலும் அடைந்த பயனானது தன்செவிலித்தாயால் அடைந் ததினும் மிகவும் குறைவுடைத்து". ஆதலால் குழந்தையின் சுபா வம்பண்படுதற்கு முன்மாதிரிகளே, முழுப்பயத்தன. அவர்களை நல்லொழுக்கத்தினராக்கவிரும்பின் அவர்களுக்கு முன் நல்லமாதிரி களையே காட்டவேண்டுவது அவசியம். இனி, ஒவ்வொரு குழந் தையின் திருஷ்டியிலும் பெரும்பான்மையும் நீங்காதிருக்கத்தக்க முன்மாதிரியானவள் அன்னையேயாம்.

ஓர்நல்ல தாய் நூறு ஆசிரியருக்கு நிகர்என்று ஜியார்ஜ்ஹெர் பர்ட்சொன்னார். அவன் வீட்டிலுள்ளார் அனைவருடைய மனங்களு க்கும் ஊசிக்காந்தம் போலவும், அனைவருடைய கண்களுக்கும் துரு வநட்சத்திரம் போலவும் இருக்கின்றனள். தாயாரைப்போல் நடப்ப தே மாறுத்தன்மையது. கண்டுபாவனையை, பேக்கன் என்பவர், வி திகள்மயமான ஓர்பளிங்குருண்டைக்கு ஒப்பிடுகின்றனர். ஆனால் செய்து காட்டலானது சொல்லிக்காட்டலைவிட எத்தனையோ மட ங்கு மிகச்சிறந்தது; அது செய்கையாற் கற்பித்தல் ஆம்; அது மௌ னமாய் உபதேசித்துப் பெரும்பாலும் வாக்கினும்சிறந்த பிரத்தியக்ஷ ப்படுகின்றது. கெட்ட ஒழுக்கமுடையவன் நவிலும் உயர்ந்தஒழு க்கவிதிகள் பயனற்றனவாம். ஒருவனுடைய நடையை மற்றவன் அநு சரித்து நடப்பானேயன்றி, அவனுடைய வாக்கின் விதிகளை அனுசரி ப்பது இன்று. உள்ளவாறே நடைக்குமுரணியவிதிகள் பயனற்றன வென்பதினும் மிகவும்கேட்டையளிப்பன வென்போம். ஏனெனின் அது கேவலம் தீநெறிகளுள் மிக்ககோழைமையாகிய பாசாங்கைக் கற்பிக்க உதவுகின்றது. குழந்தைகளும்கூட முன்பின் ஒற்றுமை யை நிதானிக்கின்றனர். வாக்கினால் ஒன்று சொல்லிச் செய்கையால் முரண்பட்டதந்தையின் கற்பனைகள் விரைவில் வெளிப்படுகின்றன. கைச்சட்டையில் திருடினவாத்தினை யுடையவனாய் உண்மையின் கு ணத்தை உபந்நியசித்த சந்யாசியின் போதனையானது அதிகமான மதிப்பற்றுப்போய்விட்டது.

ஒருவன் செய்கையைப்பார்த்து நடப்பதால், ஒழுக்கமானது, மெல்லத்தன்னறியாதே வளர்ந்து, ஒடுக்கத்தில் திண்ணமாக உண்

டாகின்றது. அனேக செய்கைகள் அற்பமாகத்தோற்றலாம். ஆனால் அவைகள் நம்வாழ்நாளின் நித்யநடத்தைகளாயிருந்து வருகின்றன. பனிப்படலங்களைப்போல, அவைகள் உண்டாவது கண்ணுக்குப்புலப்படாது. குவியல் உண்டாவதற்கான ஒவ்வொருபனிப்படலமும் புலப்படாதேபோனாலும், அவைகள்கூடி பனியருவியை உண்டாக்குகின்றன; அவ்வாறே ஒன்றன்பின்னொன்றாகத் திரும்பத்திரும்பச்செய்யப்பட்டசெய்கைகள், கடைசியில், வழக்கமான ஒருமுகப்பட்டு மனிதனுடைய செய்கையை நன்மை அல்லது தீமையதாக உறுதிப்படுத்தி, ஒழுக்கமாக உற்பவிக்கின்றன.

தந்தையைப்பார்க்கிலும் எவ்வளவோ அதிகமாய்த் தாயானவள் குழந்தையின் செய்கையையும் நடத்தையையும் வசப்படுத்துவதால், அவளுடைய நல்லநிதர்சனமானது வீட்டில் மிகவும் முக்கியமானது. இஃது எவ்வாறு என்பதைஎளிதாயறியலாம். வீடானது ஸ்திரீகளுடைய இராஜ்யமாகின்றது. அங்கே அவளுடைய முழுஅதிகாரத்தையும் செலுத்துகின்றனள். அவளுடைய சிறியகுடிகளாகிய குழந்தைகளின்மீது செலுத்துகிற அதிகாரமானது சுவாதீனமாயுள்ளது. அவர்கள் எல்லாவற்றிற்கும் அவளையே நோக்குகின்றனர். அவர்களுடைய கண்முன்னர் நிதர்சனமாகவும், மாதிரியாகவுமிருப்பவள் மாதாவாகையால் தன்னறியாமலே அவளை அநுசரிக்கின்றனர். அதிபால்யத்தில் அமைந்த நிதர்சனம், அதிபால்யத்தில் மனசில் ஊன்றியகருத்துக்கள்—ஆகிய இவற்றின் சக்தியைப்பற்றி கௌலி என்பவர் பேசுங்கால், வளர்ந்து காலத்தால்விசாலமாகத் தக்கதோர் இளவிருக்ஷத்தின் பட்டையில் வெட்டப்பட்ட எழுத்துக்களுக்கு அவற்றை ஒப்பிடுகின்றனர். அக்காலத்தில் அழுந்தியவைகள் எவ்வளவு சொற்பமாகத்தோன்றினபோதிலும் ஒருக்காலும் அழிபடமாட்டா; அக்காலத்தில் மனதிற்பட்ட விஷயங்கள் பூமியிற் படிந்து சிலகாலம் அங்கேகிடந்து, முளைக்கிறவித்துக்களைப்போல பிற்காலத்தில் செய்கைகளாகவும் கருத்துக்களாகவும் வழக்கங்களாகவும் விளைகின்றன. இவ்வாறு தாயானவள் தன்குழந்தைகளிடத்து மறுவாசமடைகிறாள். அவர்கள் தன்னறியாமலே அவளுடைய நடை உடைபாவனை பேச்சுக்களைப்போலப் பழகிக்கொள்ளுகின்ற

னர். அவளுடைய வழக்கங்கள் அவர்களிடத்துப்பொருந்துகின்றன. அவளுடைய ஒழுக்கம் அவர்களிடத்தில் பிரத்தியக்ஷமாய் மாறிமாறி உண்டாகின்றது.

தாயின் அன்பானது நம்முடைய ஜாதியாருக்கு பிரத்தியக்ஷமான தெய்வமாக நிகழ்கின்றது. அதன் அதிகாரம் இடையறாது எங்கும் வியாபித்திருக்கின்றது. அது, மனிதர்பிறந்ததுமுதல் படிப்பிக்கத்தொடங்கி ஒவ்வொருநல்ல மாதாவும் செலுத்துகிற வசவிருத்தியின் ஆற்றலால் அவர்களின் ஜன்மமுழுதும் நீடிக்கின்றது. ஒவ்வொருவரும் உலகத்திற் பிரவேசித்து அதன் உழைப்பிலும் இச்சாகர்மங்களிலும் கஷ்டசோதனைகளிலும் மூண்டபொழுது, தங்களுடைய துன்பமும் கஷ்டமுமான சமயத்தில், ஆலோசனைக்கன்றெனினும், ஆறுதலுக்காகத் தங்கள் தாயாரை நோக்குகின்றனர். அவர்களுடைய குழந்தைப்பருவத்தில் அவர்களது மனசில் அவள்விதைத்துள்ள தூய்மையும் நன்மையுமான கருத்துக்கள் அவள் இறந்த வெகுகாலத்திற்குப் பின்னர் நல்லசெயல்களாக வளர்ந்து வருகின்றன.

அவளுடைய ஞாபகத்தைத்தவிர வேறுயாதும் தங்களிடம் இல்லாத பொழுது அவள்குழந்தைகள் கிளம்பி அவளைத் தெய்வானுக்கிரகம் பெற்றவளாக அழைக்கின்றனர். உலகத்தில் இன்பம் அல்லது துன்பம், அறிவு அல்லது அறியாமை, நாகரீகம் அல்லது நாகரீகமின்மையாகிய இவை ஸ்திரீகளுடைய கிரகமாகிய விசேஷராஜ்யத்தில் அவளுடையஅதிகாரத்தைப் பிரயோகிப்பதின் மீது மிகவும் சார்ந்திருக்கின்றது—என்று உண்மையாகக் கூறுவது புனைந்துரையன்று. உள்ளபடியே நாகரீகத்தின் மிகுந்தஆதிக்கியமானது நல்ல ஸ்திரீகளுடைய சக்தியால் உண்டாகிறதென்று எமர்சனென்பவர் விரிவாயும் உண்மையாயும் சொல்லுகின்றனர். பின் சந்ததியானது பிரத்தியக்ஷமாய்த் தாயின் மடியிலுள்ள குழந்தைவடிவமாகத் தங்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. முதலில் விசேஷமாய் வசப்படுத்திக்கற்பிக்கிறவர்களின் சிக்ஷைக்கும் நிதர்சனத்திற்கும் தக்கபடி அந்தக்குழந்தை கடைசியில் உருப்படுகின்றது.

(இன்னும் வரும்.)

# பஞ்சதந்திரம்.

நம்பரதகண்டமே நீடூழிகாலமாக நீதிகள் பொதிந்த கட்டுக் கதைகளுக்குப் பேர்போன இடமாயிருந்து வந்ததென்பது உலகமறிந்தவிஷயம். ஆரியருடைய கட்டுக்கதைகளெல்லாம் ஜாதகக்கதைகள் என்ற பிரபந்தத்தில் காணப்படுகின்றன என்றும் இக்கதைகள் கிறிஸ்தாப்தத்துக்குச் சில நூற்றுண்டின் முன்னரே எழுதப்பட்டனவென்றும் இவைகளிற் பல ஐரோப்பாவின் பலபாகங்களிலும் சென்று உலாவித் தற்காலரூபத்தை அடைந்திருக்கின்றனவென்றும் டாக்டர் ரிஸ்டேவிஸ் என்பவர் கூறுகின்றுர்.

பஞ்சதந்திரக்கதைகளோ நெடுநாளாகப் பரதகண்டத்தில் வியாபகமாயிருந்து பின்னரே தற்காலத்திற் காணப்படுகிறவண்ணம் அழகான வசனநூலாக சம்ஸ்கிருதத்தில் இயற்றப்பெற்றிருத்தல் வேண்டுமெனத் தோற்றுகிறது. கி. பி. 531—572-ம் ஆண்டுகளில் அரசுபுரிந்த நூஷர்வான் என்னும் பாரஸீக அரசன் காலத்து இவ்வினிய நூல் பாரஸீக பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டது. இதனுல் 6-ம் நூற்றுண்டிற்கு முன்னரே ஸம்ஸ்கிருத பஞ்சதந்திரம் எழுதப்பட்டிருக்க வேண்டுமென்பது தெளிவாகின்றது. பாரஸீகத்திலிருந்து அரேபியர் தம்பாஷையில் மொழிபெயர்க்கலாயினர். அரபிக் பாஷையிலிருந்ததை ஸிமியன்சேத் என்பவர் 1080-ம் ஆண்டில் கிரேக் பாஷையில் மொழி பெயர்த்தனர். கிரேக் பாஷையிலிருந்து பாஸ்ஸினஸ் என்பவர் லத்தீன் பாஷையில் மொழிபெயர்த்தனர். 1250-ம் ஆண்டு லத்தீன் பாஷையிலிருந்து ராபி ஜோஎல் என்பவர் எபிரேயபாஷையில் மொழிபெயர்த்தனர். 1215-ம் வருஷத்தில் அரபிக்பாஷையினின்றும் ஸ்பானியர்கள் மொழிபெயர்க்கலானுர்கள். 15-ம் நூற்றுண்டிலே முதல் முதல் இக்கதைகள் ஜர்மன்பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டன. அக்காலந்தொடங்கியே ஏனை ஐரோப்பியபாஷைகள் பலவற்றினும் மொழிபெயர்க்கப்படலாயின. இவைகளே பில்பே கட்டுக்கதைகள் என்ற பெயருடன் வழங்கலாயின.

ஓர் ஆரியன் தன் தேசத்தின்கண்ணே பரம்பரையாக உலாவி வந்த கதைகளை ஒரு பிரபந்தமாக ஸம்ஸ்கிருத பாஷையிலியற்றவே

உலகத்திலுள்ள சிறுர்களெல்லாம் படித்துக்களித்துப் பொழுதுபோக்கும் படியாக வாய்த்தது. காலக்கிரமத்தில் இவ்வரியநூல் நம் நாட்டுச் சுயபாஷைகளிலெல்லாம் மொழிபெயர்க்கப்பட்டது. சொற்சுவையும் பொருட்சுவையும் செறிந்த நம் தமிழ்ப் பஞ்சதந்திரமோ நேரில் ஸம்ஸ்கிருதத்தினின்றும் மொழிபெயர்க்கப்படாமல் கன்னடபாஷையினின்றும் மொழிபெயர்க்கப்பட்டது. ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் நம் சென்னைமாநகரில் இராஜாங்க துவிபாஷியாயிருந்த வித்வான் தாண்டவராய முதலியார் அவர்கள் இம்மொழிபெயர்ப்பைச் செய்யலாயினர். கன்னடபஞ்சதந்திரம் மகராஷ்டிர பஞ்சதந்திரத்தின் மொழிபெயர்ப்பு. ஆகையால் தமிழ்ப் பஞ்சதந்திரத்துக்கும் ஸம்ஸ்கிருத பஞ்சதந்திரத்துக்கும் தந்திர விஷயத்திலும் நீதிகள் விஷயத்திலும் உள்ளவேற்றுமை அஜகஜாந்தரமெனலாம். முதனூற் பஞ்சதந்திரத்தினின்றே தமிழில் ஒரு மொழிபெயர்ப்புச் செய்தல் நலமேயாகும். தாண்டவராய முதலியார் அவர்களுடைய இனியநடையும் அதற்கு ஏற்படாவிடின் அதனை எவரும் மதியாரென்பது திண்ணம்.

இப்பஞ்சதந்திரக்கதைகளிற் சில மகாபாரதத்தில் காணப்படுகிறபடியால் இக்கதைகளுக்கு ஆதாரம் மகாபாரதமே எனத் தோற்றுகிறது. இவை கர்ணபரம்பரையாக வழங்கி வந்த கதைகளென்று முன்னரே கூறினமையால் வியாசபகவானே முதன்முதல் இவ்வரிய கதைகளை உருவாக்கித் தம் இதிகாசத்தில் நுழைத்திருக்க வேண்டுமெனத் தோற்றுகிறது. எவ்வாறிருப்பினும் ஆரியர்களே இக்கதைகளுக்கு மூலகர்த்தாக்களாவார்கள். இவை நிற்க.

இக்கதைகளிற் பல **கதாசரித்சாகரம்** என்ற ஒரு பெரும் ஸம்ஸ்கிருத நூலிற்காணப்படுகின்றன. இந்நூலை இயற்றியவர் காஷ்மீர் தேசத்துப் புலவர்பெருமானாகிய சோமதேவரென்பவர். இப்புலவர் இதனைத் தம்மூர் அரசி சூரியவதி தன்பேரன்ஹர்ஷதேவன் மரணத்தால் துன்பக்கடலில் ஆழ்ந்துகிடக்கையில் அவ்வரசிக்குத்தேறுதலுண்டாகும் வண்ணம் இயற்றியதாகக் கூறுவர். இந்நூல் 18-பகுதிகளும் 124-அதிகாரங்களும் கொண்டது. இப்பரதகண்டத்தில் வழங்காநின்ற பழங்கதைகள் எல்லாவற்றிற்கும் இந்நூலே அடைக்கலத்

தலம் எனக்கூறினும் இழுக்காகாது. இதில் இராமாயணம், மகாபாரதம் என்ற இதிகாசங்களின் சில கதைகளும், புராணங்களின் சில கதைகளும், பஞ்சதந்திரத்தின் பலகதைகளும், வேதாளக்கதைகள் இருபத்தைந்தும், விக்கிரமாதித்தன் கதைகளும் காணப்படுகின்றன. இக்கதைகளைக்கூறியவர் மகததேசத்து மன்னனான சந்திரகுப்தனின் அமைச்சராகிய காத்யாயனர் என்றும், இவை ஒரு பைசாசத்தால் தக்ஷிணத்துக்குக் கொண்டு போகப்பட்டு பைசாசபாஷையில் குணாட்டியருக்குக் கூறப்பட்டனவென்றும் அவரே இவற்றைஒருங்குதிரட்டி வெளியிட்டனர் என்றும் இதன் முகவுரை கூறும். இது கட்டுக்கதையென்றும் உண்மையில் தென்னிந்தியாவில் உலாவிவந்த கதைகளை ஒருவர் கிரட்டிப் பிரகத்கதை (பெருங்கதை) என்ற பெயருடன் பைசாசபாஷையில் எழுதினரென்றும் இப்பெருங்கதையின் சுருக்கமே கதாசரித்சாகரமென்றும் நம்நாட்டுச் சரித்திரகாரராகிய ஸ்ரீராமேசசந்திரதத்தர் கூறுவர்.

விக்கிரமாதித்தன் சபையின் கண்ணே ஓங்குபுகழுடன்விளங்கிய காளிதாசன், சங்கு, தன்வந்திரி, வேதாளபட்டன், அமரசிம்மன், க்ஷபணகன், கடகர்ப்பரன், வரருசி, வராகமிகிரன் என்ற நவரத்நங்களில் ஒருவராகிய வரருசி யென்னும் புலவர்பெருமான் பிராகிருத இலக்கண விஷயத்தைப்பற்றி எழுதியுள்ளார். அதில் மகாராஷ்டிரிஎன்று கூறப்பட்ட பிராகிருதபாஷை ஸம்ஸ்கிருதத்தினின்றும் உண்டானதென்றும், அவ்விதமே ஸௌரஸேனி மாகதி என்ற வேறுஇருபாஷை உண்டாயினவென்றும், அந்தஸௌரஸேனியினின்றும்பைசாசி என்ற பாஷைஉண்டாயிற்றென்றும் கூறுவர். இந்நான்குபாஷைகளும் பிற்காலத்திற்றான் வடஇந்தியாவில் பேசும்பாஷையாகத் தொடங்கின. ருக்வேதகாலத்து ஸம்ஸ்கிருதபாஷைக்குபிரதி தற்கால ஸம்ஸ்கிருதமும், அதற்குப்பிரதி பௌத்தர்கள் பேசிவந்த பாலிபாஷையும், அதன் பின்னர் மேற்கூறப்பட்ட நான்குபிராகிருத பாஷைகளும், பேசும் பாஷைகளாய் வட இந்தியாவிற் பரவத்தொடங்கின. புத்தமதம் க்ஷீணித்து ஆரியமதம் தலையெடுக்கவே பிராகிருதபாஷைகளும் மறைந்து ஹிந்திபாஷைக்கும் மற்ற அநேக சுதேசபாஷைகளுக்கும் இடங்கொடுத்தன. இவ்விதம் பலபாஷைகளிலும் சென்று

வியாபித்த பஞ்சதந்திரக்கதைகள் உலகம் உள்ளவரை ஒப்புயர்வில் லாக்கதைகளாக நிலைநிற்குமென்பது உண்மையே. ஸம்ஸ்கிருத ஹிதோபதேசத்துக்கும் இப்பஞ்சதந்திரமே முதனூலாகும் என்னில் இதன் மாண்பைக்கூறலும் வேண்டுமோ.

எஸ். சாமிநாதையர்,

மதுரை.

---

உ

சிவமயம்.

# இராமாவதாரச்செய்யுட்பாடாந்தரம்.

(உ-ம் பகுதி. ருO-ம் பக்கத்தொடர்ச்சி)

## கரன்வதைப் படலம்.

ஆர வாழ்க்கையின் வணிகரா யமைதிரோ வயில்வேல்
வீர வாட்கொடு வேன்மடுத் துழுதிரோ வெறிபோர்த்
தீர வாழ்க்கையிற் றெவ்வரைச் செருவிடைப் பறித்த
வீர வாட்கையி ரெங்ஙனம் வாழ்திரோ விளம்பீர்.

என்னும் கசள—ம் செய்யுளில், 'வீரவாட்கொடு வேன்மடுத்துழு திரோ' என்பது "வீரவாட்கொழுவொடு மடுத்துழுதிரோ" எனக்காணப்படுகின்றது. வேலையும் வாளையும் கொண்டு வேல்களிற்கொழு வாக மடுத்துழுதிரோ என்பது பொருத்தமின்றாதலின், பின்னையதே பொருத்த முடைத்து. இருமுறை வேலைக்கூறல்வழுவென்க.

ஒ

"என்று தானுந்தன்" என்னும் கசஅ—ம் செய்யுளின்பின்,—

நடந்த தன்னிரு கரத்தினி னலம்பெறுஞ் சிலைவாய்த்
தொடர்ந்த நாணொலி யெழுப்பினன் றுகைப்படு மண்ட
மிடிந்த தென்னநின் றதிர்ந்ததங் கிறைவனு மிமைப்பின்
மிடைந்த வெஞ்சர மழைவிடு தாரையின் விறைத்தான்.

என்னுஞ் செய்யுள் காணப்படுகின்றது. பின்னுமுன்னு மியைபுடைமையிற் பொருத்தமுடைத்து.

---

## மாரீசன் வதைப்படலம்.

வேறு

பிரகர நெடுந்திசைப் பொருந்தண் டேந்திய
கரதலத் தண்ணலைக் கண்ணி னோக்கிய
நரகின ராமென நடுங்கு நாவின
னுட்கர்க டம்மன முலைந்து சுழவே.

என்னும் ௧௧-ம் செய்யுளில், 'பிரகரநெடுந் திசைப் பெருந்தண் டேந்திய' என்பது 'பிரிதர நெடுந்திசைப் பெருந்தண் டேந்திய' எனக்காணப்படுகின்றது. கொலைத் தொழிலையுடைய நெடியதிசை (தென்றிசை) என்னும்பொருள்கொள்ளுமிடத்தும், பிறவாறுரைக்குமிடத்தும் முன்னையது பொருத்தமின்றாதலின் பின்னையதே பொருத்தமுடைத்து. பின்னையதற்கு நெடியதிசை விள்ளும்படி பெருந்தண் டேந்திய என்பதுபொருள்; அத்துணை நீண்டதண்டு என்றபடி. தண்டேந்திய கரதலத்தண்ணல— இயமன்.

வேறு

சாளரத் தூடு வந்து தவழ்தலுந் தரித்த றோரு
னீளாத் தங்கள் சிந்தி நெருப்புக நோக்கு நீரான்
வாழ்மனை புகுந்த தாண்டோர் மாசுணம் வரக்கண் டன்ன
கோளுறக் கொதித்து விம்மி யுழையரைக் கூவிச் சொன்னான்.

என்னும் ௧௯௪—ம் செய்யுளில், 'நோக்குநீரான்' என்பது 'நோக்குங் கண்ணான்' எனக்காணப்படுகின்றது. நீரான் என்றதினும் 'கண்ணான்' என்பதே பொருட்சிறப்புடைத்தாதல் காண்க.

வேறு

கூவலி னுயிர்த்த சின்னீ ருலகினைக் குப்புற் றென்னத்
தேவரி னொருவ னென்னை யின்னலுஞ் செய்யத் தக்கா
னேவலி னன்றி வந்திங் கிவ்வழி யெய்திற் றென்னாக்
காவலி னுழையர் தம்மைக் கொணருதிர் கடிதி னென்றான்.

என்னும் ககூ௩-ம் செய்யுளில், 'ஏவலினன்றி வந்திங் கிவ்வழியெய்திற் றென்ஞ' என்பது 'ஏவலினன்றித் தென்றலெவ்வழியெய்திற் றென்ஞ' எனக்காணப்படுகின்றது. 'எனது கட்டளையல்லாமல் இங்கு இவ்வழியாக வந்தது' எனத் தனது ஆஞ்ஞையாகக் கூறலின், அது 'காவலினுழையர்தம்மைக் கொணருதிர் கடிதினென்ருன்' என்பதற்கு மாறுபடுதலின் பின்னையதே பொருத்தமுடைத்து. பின்னையதற்கு, காவலாளருடைய கட்டளையினலல்லாமல் எவ்வாறு வந்ததென்று கருதி எனவுரைக்க; எனவே அவர்கள் கட்டளைப்படி தான் வந்ததென்று கருதி என்பதாம். வாயுவை அழைத்துவாருங்கள் என்றல் பொருந்தாமை பிற்கூறும் செய்யுட்பாடத்தாற் பெறப் படும்.

ஷை

அவ்வழி யுழைய ரோடி யாண்டவற் கொணர்த லோடும்
வெவ்வழி யமைந்த செங்கண் வெருவுற நோக்கி வெய்யோன்
செவ்வழி தென்ற லோற்குத் திருத்தினை நீகொ லென்ன
இவ்வழி யிருந்த காலைத் தடையவற் கில்லை யென்ருன்.

என்னும் ககூ௩-ம் செய்யுள்,

அவ்வழி யுழைய ரோடி யாண்டவற் குரைக்க வந்தார்
வெவ்வழி யரக்கர் கோமான் வெகுண்டவர் தம்மை நோக்கிச்
செவ்வழி தென்றற் காறு திருத்தினீ ரென்கொ லென்ன
விவ்வழி யிருந்த காலைத் தடையவற் கில்லை யென்ருன்.

எனக்காணப்படுகின்றது. தென்றலே காற்ருகலானும், மண்டபத் தினுள்ளே வந்தமையைப்பற்றி விசாரிக்கவேண்டியது காவலினுழை யரையே யாதலானும் முன்னையதுபொருத்த மின்மையின் பின்னைய தே பொருத்தமுடைத்து. அன்றியும், இதன் பின்னே காட்டப் படும் செய்யுளானும் முன்னையதுபொருந்தாமை பெறப்படும். இச் செய்யுளின் பின்,

வேண்டிய நினைத்துச் செய்வான் விண்ணவர் வருவ ரென்ருன்
மாண்டது போலு மென்னே யென்னுடை வலிநீ ரிப்போ
தேண்டியே திசைக டோறுஞ் சேனுறச் சென்று வல்லே
யீண்டிவன் றன்னைப் பற்றி யிருஞ்சிறை யிடுதி ரென்ருன்.

என்னும் செய்யுள் காணப்படுகின்றது. இதன் பிற்செய்யுளுக்கு இஃது இயையுடைத்தாதலிற் பொருத்தமுடைத்து எனக.

என்னவுரை யத்தனையு மெத்தனையு மெண்ணச்
சொன்னவனை யேசின வரக்கர்பதி சொன்னா
னன்னையுயிர் செற்றவனை யஞ்சியுறை கின்றா
யுன்னையொரு வற்கொருவ னென்றுணர்கை நன்றோ.

என்னும் ககூஎ-ம் செய்யுளில், 'எண்ண' என்பது 'எண்ணி' எனவும் 'சொன்னவனையேசின வரக்கர்பதி' என்பது 'சொன்னவனை வைதட லரக்கர்பதி' எனவும், 'உன்னையொருவற்கொருவ னென்றுணர்கை நன்றோ' என்பது, 'உன்னையுறவுக்கொருவ னென்றுரைய லாமோ' எனவும் காணப்படுகின்றன. முன்னைய விரண்டிலும் எச்சமுடிபு சிறவாமையானும், பின்னையதிற் பொருள்சிறவாமையானும் முன்னையபாடங்களினும் பின்னையபாடங்களே பொருத்தமுடையன வாதல்காண்க.

ஷ

பற்று வானினி யல்லன் பகழியாற்
செற்று வானிற் செலுத்தலுற் றானென
மற்ற மாய வரக்கன் மனக்கொளா
வுற்ற வேகத்தி னும்பரி னேங்கினான்.

என்னும் உசரு—ம் செய்யுளில், 'செற்றுவானிற் செலுத்தலுற்றானென' என்பது 'செற்றுவானிற் செலுத்துவ னென்பதை' எனக் காணப்படுகின்றது. பொருட்சிறப்புண்மையானும், ஓசைச்சிறப்புண்மையானும் முன்னையதினும் பின்னையதே பொருத்த முடைத்து.

(இன்னும் வரும்.)

சி. கணேசையர்.

---

ஸ்ரீ:

# ஸ்ரீபட்டர்வைபவம்.

(ரு ௭ள-ஆம் பக்கத்தொடர்ச்சி)

[ஸ்ரீ: வை. மு. சடகோபராமாநுஜாசாரியரவர்கள் எழுதியது.]

இப்படி ஸ்ரீபாஷ்யகாரரும் பட்டரும் உலகமுழுதும் உய்யும்படி வடமொழி தென்மொழி மறைமுடிவுகளை வியாக்கியானித்துக் கொண்டு உபயவேதாந்தப் பிரவர்த்தனஞ் செய்கிறதிறத்தைக் குறித்து நம்பெருமாள் மிகவுந் திருவுள்ளமுகந்து 'ஆசார்யாதிபத்யத்தில் உடையவர்க்குப் பட்டாபிஷேகமும், பட்டர்க்கு யுவராஜபட்டாபிஷேகமுஞ் செய்யுங்கள்' என்று அடியார்கட்கெல்லாம் ஆர்ச்சகமுகமாக ஆஜ்ஞாபித்துத் திருப்பரியட்டம் திருமாலைமுதலியவரிசைகளை அனுப்பியருள, அந்நம்பெருமாள்நியமநத்தின்படி தொண்டர்களனைவருங்கூடிப் பெருமகிழ்ச்சியுடன் ஸ்ரீபாஷ்யகாரரையும் பட்டரையும் ப்ரஹ்மரதத்திலேற்றித்திருவரங்கநகர் வலம்வந்து திவ்யசிங்காதனங்களில் எழுந்தருளப்பண்ணி, பலவிடங்களிலிருந்து வருவித்த புண்ய தீர்த்தங்களைக்கொண்டு மந்திரபூர்வமாக அபிஷேகஞ்செய்து, முன்புதிருவயோத்தியிலுள்ளார் ஸ்ரீராமபிரானுக்கும் பரதாழ்வானுக்கும் பட்டாபிஷேகஞ்செய்ததுபோல வெகுசம்பிரமமாக எம்பெருமானார்க்கு ஆசார்யாதிபத்ய பட்டமும், பட்டர்க்கு இளவரசுப்பட்டமுங் கட்டிக்களிகூர்ந்தார்கள்.

இத்தன்மைத்தான மகா விபவத்துடனே எம்பெருமானாரும் பட்டரும் வாழ்ந்தருளுங்காலத்திலே ஆழ்வான் திருநாட்டுக்கு எழுந்தருளினர்.

ஸ்ரீரங்கத்து நிகழ்ச்சி இங்ஙனமாக, மேல் நாட்டிலே திருநாராயணபுரத்திலே கலிவருஷம்-௪௨௧௫-ஆவதும், சாலிசகம்-௧௦௩௬-ஆவதுமான விஜயவருஷத்திற் பங்குனிமாதத்து உத்தரநக்ஷத்திரத்திலே அந்தண வருணத்தில் அவதரித்த மாதவசூரியென்பவர், இளமைதொடங்கிப் பலஆசாரியர்களை யடுத்து அநேகசாஸ்திரங்களிற் பயின்று தேர்ந்து, பற்பல ராஜசபைகளிற்சென்று சமயவாதஞ் செய்து தம்கல்வித்திறத்தைக்காட்டி, அது பற்றிவியந்து அவரவர்

அளித்த விசேஷவெகுமானங்களைப்பெற்றுப் பெருஞ்செல்வமுடையராய், வேதாந்த பாண்டித்தியத்தால் வேதாந்தியென்று பெயர் படைத்து, கங்கோரையென்கிற ஊரைத் தாம்வாழுமிடமாகக்கொண்டு ஆறு சாஸ்திரங்களையும் தாம்கரைகண்டமைக்கு அறிகுறியாக அந்தந்தச்சாஸ்திரங்களின்பெயரால் ஆறு ஆசனங்களை ஒன்றன்மேலொன்றாக இட்டு அந்த அடுக்குப்பீடத்தின் மீது பெருமிதந்தோன்றவீற்றிருந்து, அநேகசிஷ்யவர்க்கங்கள்புடைசூழ தம்மிடம் வருகிற வித்வான்களையெல்லாம் வாதப்போரில் வென்று, ஆன்மகோடிகளே பரமென்னுஞ் சமயத்திலூன்றி அதனை நிர்வகித்துக்கொண்டு அதிப்பிரசித்திபெற்றுவரலாயினர்.

இப்பால், ஆழ்வானுக்குச் சரமகைங்கரியங்களெல்லாஞ் செய்தானபின்பு, உடையவர் பட்டரைக் கோயிலுக்கு அழைத்துக்கொண்டுசென்று நம்பெருமாளைச் சேவிக்கப்பண்ணுவித்து அவரைக் கையைப் பிடித்துக்கொண்டுபோய்ப் பெருமாள் திருவடிகளிலே ஒப்பிக்க, பெருமாள் தாம் அவரை முன்பு புத்திரஸ்வீகாரம் பண்ணிக்கொண்டமை தோன்ற விசேஷகடாக்ஷஞ்செய்து 'ஆழ்வானையிழந்தோமென்று ஆகுலப்படவேண்டா; நம்மை ஆழ்வானாகநினைத்திரு' என்று அர்ச்சகமுகமாக அருளிச்செய்து, வேதாசார்ய பட்டரென்று ஒருதிருநாமமிட்டருளினர்.

பிற்பாடு பாஷ்யகாரர் ஒருகால் பெருமாளுடைய வீரசரித்திரமாகிய ஸ்ரீராமாயணத்தைத்திருச்செவிசார்த்தத் திருவுள்ளமாய் இதிஹாஸஜ்ஞரான பட்டரையும் சீராமப்பிள்ளையையும் அழைத்துத் தம்முன்னிலையில் ஆதிகாவியத்தைப்படிக்கும்படி நியமிக்க, முன்பு திருவயோத்தியில் இராமசந்நிதியிலே இராமபுத்திரர்களான குசலவர்கள் இராமாயணத்தைக் கானஞ்செய்தாற்போல இராமஸோமயாஜியாரின் பௌத்திரர்களாகிய வியாஸபராசரபட்டரிருவரும் லக்ஷ்மணமுனிசமான இராமாநுசர் திருமுன்பே ஸ்ரீவால்மீகத்தைத் தமது குயிலின் குரல்போன்ற திவ்வியசாரீரத்தைக்கொண்டு இன்னிசையமைத்து வாசிக்க, உடையவர் செவிக்கினிதாகக்கேட்டு ஆனந்தமடைந்து அக்குமாரர்களுக்கு நல்லசிறப்புக்கள் செய்தனுப்பினர்.

*

அநந்தரம் எம்பெருமானார் திருமேனிதளர்ந்தவராய்ப் பரமபதமடையத் திருவுள்ளமாகி அடியவரனைவரையும் அழைத்துப் பட்டரைக் காட்டிக்கொடுத்து 'இவரை நம்மைப்போலவே பார்த்துக்கொள்ளுங்கள்' என்று நியமித்துப் பட்டரைப் பெரியபெருமாள் சந்நிதிக்கு அழைத்துக்கொண்டுபோய்த் தமக்குமுன்னாக அவர்க்குத்தீர்த்தப்பிரஸாதங்கள் கொடுப்பித்து அவரைநோக்கி 'மேல்நாட்டிலே வேதாந்தியென்று ஒருபெரியவித்வான் இருக்கிறதாகக் கேள்விப்படுகிறோம்; நீர் அங்கேபோய் அவனைத் திருத்தி நம்தரிசனப்பிரவர்த்தகனாக்கும்' என்று அருளிச்செய்து திருநாட்டுக்கு எழுந்தருளினர்.

பிறகு அடியார்களெல்லாரும் பட்டரைச்சேவித்து எம்பெருமானாரை யிழந்ததனாலாகிய கிலேசம் ஒருவாறு தீர்ந்தவர்களாய் இவரையே அவராகக்கொண்டு அர்த்தவிசேஷங்களை இவரிடங்கேட்டுணர்ந்து அந்த உகப்பின் மிகுதியாலே 'ஸ்ரீபராசரபட்டரென்னுஞ் சிங்கமானது பிரதிவாதிகளாகிய யானைகளுடையமஸ்தகத்தை வேதாதிப்பிரமாணங்களாகிய நகங்களால் நன்றாகப் பிளந்துகொண்டு வேதாந்தகர்ஜனஞ்செய்து விளங்குகின்றது *' என்பது முதலாகப் பற்பல துதிமொழிகளைக் கூறி அவரநுமதிப்படி நடந்துவந்தார்கள்.

† "மாறன் பணித்த தமிழ்மறைக்கு மங்கையர்கோன், ஆறங்கங்கூற" என்றபடி வடமொழிவேதங்கள் நான்குக்கும் ஆறுசாஸ்திரங்கள் அங்கமாக அமைந்திருக்கின்றதுபோல, அவ்வேதங்களின் உட்பொருள்கொண்டு நம்மாழ்வார் அருளிச்செய்த நான்கு திவ்வியப்பிரபந்தங்களுக்கும் அங்கங்களாகத் திருமங்கையாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய ஆறுதிவ்யப்பிரபந்தங்களுள் திருநெடுந்தாண்டகத்திலே பட்டர் மிகவும் கருத்துஊன்றி அதன்ஆழ்பொருளில் ஈடுபட்டு 'திருநெடுந்தாண்டக சாஸ்திரம் வல்லவர்' என்றுபெயர்பெற்றவராய், அப்பிரபந்தத்தின் அர்த்தத்தைத் தமது திருவோலக்கத்திலே

---

* "ப்ரமாணநகநிர்ப்பிந்நவாதிதந்திகமஸ்தக: ।
ராஜதே நிகமாந்தேஷு ஸ்ரீபராஸரகேஸரீ"॥

† உபதேசரத்தினமாலை—௯.

பலகாலும் பரக்க உபந்யஸிப்பர். அதிலும் இருபத்தோராவது பாசுரமாகிய—

“மைவண்ண நறுங்குஞ்சி குழல்பின் தாழ
மகரஞ்சேர் குழையிருபா டிலங்கி யாட
எய்வண்ண வெஞ்சிலையே துணையா இங்கே
இருவராய் வந்தாரென் முன்னே நின்றார்
கைவண்ணந் தாமரைவாய் கமலம் போலும்
கண்ணிணையு மரவிந்த மடியு மஃதே
அவ்வண்ணத் தவர்நிலைமை கண்டுந் தோழீ
அவரைநாம் தேவரென் றஞ்சி னோமே”

என்பதற்கு அதிவிஸ்தாரமாக உபந்யாஸம் அருளிச்செய்வர். அது கேட்டு ஸ்ரீபாஷ்யகாரருடைய பஞ்சாசாரியரிலொருவரான திருவரங்கப் பெருமாளரையர், மிகவியந்து ‘முன்பு ஓர்ஆசாரியரிடத்திலும் இப்படிப் பொருள்கேட்கப் பெற்றதில்லை; இப்பொழுது இவரிடத்திலே இது கேட்கப்பெற்றோம்’ என்று கொண்டாடிப் பட்டரை மிகவும் நன்குமதிக்கலானார். இந்த ஒருபாடலின் வியாக்கியானம் மாத்திரம் தனியே எண்ணூறுகிரந்தவளவுள்ளதாக வழங்குகின்றது.

ஒருசமயத்தில் அநேகவித்துவான்கள் திரண்டுவந்து பட்டருடனே பலவகையாகத் தர்க்கஞ்செய்ய, அவர் தமது ஒப்புயர்வற்ற வாதசக்தியால் அவர்களெல்லாரையும் வாயடங்கும்படிசெய்து வென்றிட்டார். பின்னும் அவர்கள் இவருடைய ஸர்வஜ்ஞதையைப் பரீக்ஷிப்போமென்று எண்ணிச்சென்று ஒருகுடத்தினுள்ளே பெரியதொரு பாம்பையடைத்து அக்குடத்தின் வாயைக்கட்டி அதனைக் கொண்டுவந்து பட்டரெதிரிலேவைத்து ‘இக்குடத்தினுள்ளேயிருக்கும் பொருள்யாது? சொல்லவல்லீராயிற் சொல்லும், பார்ப்போம்’ என்றுவினவ, பட்டர் ‘திருவெண்கொற்றக்குடை இருக்கிறது’ என்று சொன்னார். அதற்கு அவர்கள் பரிகாசமாகச்சிரித்துக் குடத்தின் வாய்க்கட்டை அவிழ்த்துவிட்டவளவிலே, அதனுள்ளேயிருந்த மகாநாகம் புறப்பட்டது. அவர்கள் அதனைச்சுட்டிக்காட்டி ‘இது திருவெண்கொற்றக்குடையோ?’ என்று ஏச, பட்டர் ‘அன்றோ?’ “சென்றாற் குடையாம் இருந்தாற்சிங் காதனமாம், நின்றால்

மரவடியாம் நீள்கடலுள்—என்றும், புணையாம் மணிவிளக்காம் பூம் பட்டாம் புல்கும், அணையாம் திருமாற்கு அரவு*" என்று ஸ்ரீபொய்கையாழ்வார் அருளிச்செய்ததை நீங்கள் அறிந்ததில்லையோ? ஸ்ரீமந்நாராயணனுக்குச் சகலவிதகைங்கரியங்களையுஞ் செய்கிற சர்ப்பஜாதியான ஆதிசேஷனாகிய திருவநந்தாழ்வான், அப்பெருமான் உலாச்செல்லும்போது அவன்மேல் மழைவெயில்படாதபடி அவனுக்குக் குடையாகின்றனனன்றோ?' என்று காரணங்காட்டித் தமது கொள்கையை ஸ்தாபிக்க, அப்புலவர்கள் இவருடைய முற்றுணர்வையும் புத்திசாதுரியத்தையுங் குறித்து ஆச்சரியப்பட்டுத் தமது தோல்விக்கு வெள்கி இவர்திருவடிகளில் விழுந்து தண்டனிட்டு இவர்க்குச் சிஷ்யராகிக் கிருதார்த்தரானார்கள்.

பட்டர் திருவடித்தொண்டர்களுடனே பெருங்கூட்டமாக எழுந்தருளியிருந்து உபயவேதாந்தப் பிரவசநஞ்செய்கிறபோது, ஸ்தலயாத்திரை செய்யுமியல்பினனான ஒருபிராமணன்வந்து பட்டர் வேதாந்தோபந்யாஸஞ் செய்கிற திறமையையும் அவரது கோஷ்டியின் வைபவத்தையுங் கண்டு அதிசயித்து அவரை நமஸ்கரித்து 'மேல்நாட்டிலே வேதாந்தியென்று ஒரு மகாவித்துவான் இருக்கிறார்; அவருடைய வித்யையும் கோஷ்டியும் போலே உமக்கும் இருந்தது.' என்று கொண்டாடிப் பேசினான். அதுகேட்டுப் பட்டர் 'அப்படியும் ஒருவித்துவான் உண்டோ?' என்ன, யாத்ரிகன் 'உண்டு' என்று சொல்லிப்போய், மற்றும் தலயாத்திரையாகச் செல்லுகையில் மேல்நாட்டையடைந்து அவ்வேதாந்தியின் கோஷ்டியிற்சென்று 'வேதாந்திகளே! உம்முடைய வித்யைக்கும் கோஷ்டிக்கும் நிகராகப் பட்டரென்பவரொருவர் உபயகாவேரிமத்தியில் ஸ்ரீரங்கத்திலே எழுந்தருளியிருக்கிறார்' என்றான். அதுகேட்டுத் திடுக்கிட்டு வேதாந்தி அந்த அந்தணனை நோக்கி 'அவர்நமக்கு ஈடோ?' என்ன, வேதியன் 'அவர் உம்மிலும் எடுப்பாயிருப்பர்' என்று உரைக்க, 'அவர்க்கு எந்தச் சாஸ்திரம் வரும்' என்று வேதாந்தி வினவியதற்கு மறையவனும் 'தர்க்கம் வியாகரணம் மீமாம்சை வேதாந்தம் என்கிற சாஸ்திரங்களெல்லாம் வரும்' என்றான். அதுகேட்ட பின்னர் வேதாந்தி 'இவ்

---

* இயற்பா-முதற்றிருவந்தாதி—ரு௩.

வுலகத்தில் நமக்கு ஒருவரும் எதிரில்லையென்று ஆறுசாஸ்திரங்களுக்கும் ஆறு ஆஸநமிட்டு அதன்மேல் உயர இருந்தோமே; பட்டர் நம்மிலும் அதிகரென்று இந்தப்பிராமணன் சொல்லுகிறானே; என்றைக்கு என்னாகுமோ?' என்று அன்றுதொடங்கி அகத்தில் அச்சமுற்றிருந்தனர். மற்றும் ஒருமுறை அந்த மறைவலாளன் தலயாத்திரையாக ஸ்ரீரங்கத்துக்கு வந்து பட்டர் சந்நிதியில் நின்று 'உம்முடைய வைபவங்களையெல்லாம் வேதாந்திக்குச்சொன்னேன்' என்றான். 'அதற்கு அவர் சொன்னது என்ன?' என்று பட்டர்கேட்க, பிராமணன் "பட்டர்க்கு என்னசாஸ்திரம்வரும்?' என்று வேதாந்தி என்னைக் கேட்டதற்கு, 'தர்க்கம் வியாகரணம் மீமாம்சை வேதாந்தம் என்கிறசாஸ்திரங்களெல்லாம் நன்றாகத் தெரியும்' என்று சொன்னேன்' என்றான். அதுகேட்ட பட்டர் 'பிராமணா! தீர்த்தயாத்திரை தலயாத்திரை நிமித்தமாய்த் தேசமெங்குந்திரிந்து பற்பலர் கல்விப்பெருமைகளையறிந்து நாகரிகனாயிருக்கிற நீ, நமக்குத் தெரிந்திருக்கிற சாஸ்திரங்களையெல்லாம் அறிந்து வேதாந்திக்குச் சொல்லாமல், அவற்றிற் சிலவற்றையே குறித்துச் சொல்லினையே' என்ன, பூசுரன் 'இவ்வுலகத்திற் பிரசித்தமாய் வழங்குகிற இச்சாஸ்திரங்கள் தவிர உமக்கு மற்றும் எதுவரும் என்று சொல்லக்கடவேன்?' என்றான். பட்டர் 'திருநெடுந்தாண்டகம்வரும்' என்று வேதாந்திக்குச் சொல்லாமற்போயினையே' என்று அவனுக்குக் கழிவிரக்கமுண்டாம்படி கூற, அவன் 'அதனையுஞ்சொல்லக்கடவேன்' என்று பின்னரும் யாத்திரைமுறையிற்சென்று மேல்நாடுசேர்ந்து வேதாந்தியைக்கண்டு 'பட்டர்க்குத் திருநெடுந்தாண்டகமும் வரும்' என்று தெரிவித்தான். அவர் அந்தநூற்பெயரைக் கேட்டுமறியாதவராதலால், 'அப்படியும் ஒருசாஸ்திரமுண்டோ? அதனையும் வல்லஅவர் எப்படிப்பட்டவித்துவானோ?' என்று ஆச்சரியப் பட்டுக்கொண்டிருந்தார்.

பிறகு பட்டர், 'முன்பு உடையவர் நியமித்தபடி நாம்சென்று வேதாந்தியைத் திருத்திப்பணிகொண்டு நமது தரிசனத்தவராகும்படி செய்யக்கடவோம்' என்றுநினைத்துப் பெரியபெருமாள் சந்நிதியிற் சேவித்து 'மேல்நாட்டிலுள்ள வேதாந்தியென்ற பெரியவித்து

வானைத் திருத்தி நம்தரிசநப் பிரவர்த்தகனும்படி பண்ணவேண்டு மென்று அவ்விடத்துக்கு விடைகொள்வதாக இருக்கின்றேன்; அவன் நன்றாகத்திருந்தி இராமாநுஜசித்தாந்தத்திற்கு நிர்வாஹகனும்படி திருவருள்புரியவேண்டும்' என்றுவேண்ட, பெருமாள் 'அவன் அப்படியே ஆகக்கடவன். விரைவிற்போய்வருக' என்று திருவுள்ளமாய்த் தீர்த்தம் திருப்பரியட்டம் திருமாலைமுதலிய வரிசைகளை அருளி, தம்குமாரரென்னும் வாசி தோன்ற விலையுயர்ந்த பல ஆடையாபரணங்களையும் வாத்தியவர்க்கங்களையும் அனேக பரிஜநங்களையும் உடன்கொண்டு போகும்படிகொடுத்து விடையளித்தருளினர்.

ஸ்ரீரங்கராஜகுமாரரான பட்டர் குடை கொடி சாமரம்முதலிய பலவரிசைகளுடனே அநேக சிஷ்யவர்க்கம் புடைசூழக் காண்பவர்க்கு இராஜகுமாரரென்று தோன்றும்படி வெகு சம்பிரமத்தோடு புறப்பட்டு மேல்நாட்டில் திருக்காவேரிக்கரையிலே சிறுப்புத்தூரினருகிலே எழுந்தருளியபோது, அவ்வூரிலெழுந்தருளியிருக்கின்றவரும் உடையவர்சிஷ்யருமான அநந்தாழ்வான் பட்டரெழுந்தருளிய செய்தியைக் கேள்வியுற்றுச் சடக்கெனப் புறப்பட்டுப் பட்டரை எதிர்கொண்டு சேவித்து 'அந்தோ! சுகுமாரரான தேவரீர் காடும்மலையுங் கடந்து இத்தனைதூரம் எழுந்தருளிற்றே!' என்று சொல்ல, பட்டர் அநந்தாழ்வான் திருவடிகளில் விழுந்து தண்டனிட்டு 'முன்பு எம்பெருமானார் நியமித்தருளியபடி வேதாந்தியைத் திருத்தி வைப்பதற்காக நம்பெருமாள் விடைகொடுத்து அடியேனை அனுப்பியருளினார்' என்று விண்ணப்பஞ்செய்ய, அநந்தாழ்வான் மிகவும் உகந்து 'எங்கள் குடிக்கரசே! வருக' என்று பட்டரையணைத்துக் கொண்டார்; அதனால், பட்டர்க்கு, பிரபந்நகுலத்தலைவரென்னும் பொருள்பட 'எங்கள் குடிக்கரசு' என்று ஒருசங்கேதநாமமாயிற்று.

அநந்தரம் அநந்தாழ்வான் எம்பெருமானார்திருவுள்ளத்துக்கு மிகப்பாங்கான யதுகிரியென்னுந் திருநாராயண புரத்துக்குப் பட்டரை அழைத்துக்கொண்டுபோக, அங்குள்ள அடியார்களெல்லாரும் எதிர்கொண்டுவந்து சிறப்புக்கள் செய்து வரவேற்க, பட்டர் அந்நகரினுட்சென்று அங்குக்கோயில்கொண்டெழுந்தருளியிருக்கிற யது

கிரிநாச்சியாரையும், திருநாராயணப் பெருமாளையும், செல்வப்பிள்ளையென்னும் இராமப்பிரியரையும், எம்பெருமானாரையுந் தொழுது விடைபெற்று அநந்தாழ்வானுடனே புறப்பட்டு, வேதாந்தியிருக்கிற ஊருக்கு அருகே 'ஆழ்வான்குமாரர் வந்தார், அணியரங்கன்புதல்வர்வந்தார், வேதாசாரியபட்டர் வந்தார், வேதியர்கள் தனித்தலைவர் வந்தார், வேதாந்தாசாரியர் வந்தார், பராசரபட்டர்வந்தார், பரவாதிமத்தஹஸ்திபஞ்சாநநர்வந்தார்' என்பது முதலாகப் பலவிருது கூறிப் பரிஜநங்கள் திருச்சின்னமூதத் தூரியகோஷத்துடனே மகாசம்பிரமமாக மணிப்பல்லக்கில் எழுந்தருளலானார்.

அவ்வளவில், எதிரிலே வந்த இரண்டுபிராமணர்கள் பட்டரை நோக்கி 'நீர் ஆர்? இவ்வகைச் சம்பிரமத்துடனே எங்கே எழுந்தருள்கிறீர்?' என வினவ, இவரும் 'நாம் ஸ்ரீரங்கபட்டர், வேதாந்திகளுடனே தர்க்கிக்கப்போகிறோம்' என்ன, அதற்கு அந்த அறுதொழிலாளர் உரைக்கலானார்:— 'நீர் இப்படி சம்பிரமத்துடனே எழுந்தருளினால், வேதாந்திகளை உமக்குக் காண இயலாதே; அவர் தமது கிருகத்தினுள்ளே இருந்துவிடுவர்; அவருடைய சிஷ்யர்களும் ப்ரசிஷ்யர்களும் தலைவாசலிலே இருந்து வந்தவித்துவான்களுடனே நாலாறுமாசம் தர்க்கித்து அவர்களை எளிதில் உள்ளே புகவொட்டார்கள்' என்றுசொன்ன முதற்குலத்தவாதுமொழியைச் செவியேற்ற பட்டர் 'ஆனால், காலஹரணமில்லாமல் நாம் நேரிற்சென்று வேதாந்தியைக் காணும் உபாயம் என்ன?' என்று அவர்களையே கேட்டதற்கு, அந்த அந்தணாளர் 'வேதாந்திகள் தனவானாதலால், தேசாந்திரிகளாய் வருகிற பிராமணர்களையெல்லாம் தமது கிருகத்தினுள்ளே தடையின்றி வரச்செய்து அவர்களுக்கு நல்ல போஜனமிடுவித்து அங்ஙனம் புசிக்கிறவர்களை அருகிலிருந்து பார்த்துக்கொண்டிருப்பர்; அங்ஙனம் சத்திரபோசனத்துக்குச் செல்லும் பூசுரர்க்கு உரிய வேஷத்தைத் தரித்து அவர்களோடு கலந்து உள்ளே சென்றுவிட்டால் அங்கு அவரை எளிதிற் காணலாம்' என்று சொன்னார்கள்.

அந்த விப்ரவாக்கியத்தை விஷ்ணுவாக்கியமாகக்கொண்டு, பட்டர் 'இவ்விரகு நன்றாயிருந்தது!' என்று கொண்டாடித் தமது பரிக

ரத்தையெல்லாம் அவ்வூருக்கு வெளியிலேயே நிறுத்திவிட்டுத் தாம் தரித்திருந்த திருவாபரணங்களையுங் களைந்துவைத்து, ஜராசந்தனை வெல்லுதற்கு வீமார்ச்சுனர்களை அழைத்துச்சென்று வாசுதேவன் செய்ததுபோலக் காலத்துக்கேற்ற கோலங்கொள்பவராய்த் தண்டக மண்டலங்களைத் தரித்துப் பிக்ஷுகவேஷம்பூண்டு அநந்தாழ்வானுந் தாமுமாய்ப் போசனார்த்திகளான பிராமணர்களுடனே விரவித் தட்டுத்தடையின்றி வேதாந்தியின் கிருகத்தினுள்ளே சேர்ந்து, அங்கு அவர் ஒரு மண்டபத்தில் ஆறு ஆசனமிட்டு அதன்மேலே பெருமதிப்புடன் வீற்றிருந்து பிராமணர்கள் புசிப்பதைப் பார்த்துக்கொண்டிருக்கிறதைக்கண்டு, பட்டர் உடன்வந்த பிராமணர்களோடு போஜனசாலையிற் புகுதாமல் வேதாந்தியினருகிலெழுந்தருள, அவர் 'அந்த சாலை அதோ இருக்கிறது; அங்குச் செல்லாது இங்கு ஏன் வருகிறீர்?' என்ன, பட்டர் 'பிக்ஷைக்கு வருகிறேன்' என்றார்; 'எல்லாரும் உண்ணுகிறவிடத்திலே உமக்கும் அந்தபிக்ஷை கிடைக்கும்; அங்கே போம்' என்று வேதாந்தி கூறியதற்கு, பட்டர் 'யான் வேண்டுவது சோற்றுப் பிச்சையன்று' என்றவளவிலே, வேதாந்தி 'இவர் சத்திரபோஜனத்துக்கு வந்தவராயினும் சிறிது வித்துவானாகவிருக்கலாம்' என்று எண்ணி 'கா பிக்ஷா?' என்று வடசொல்லால் வினவ, பட்டரும் 'தர்க்க பிக்ஷா' என்று அம்மொழியாலேயே விடையிறுத்தார். அதுகேட்டு வேதாந்தி திடுக்கிட்டு 'முன்னே தீர்த்தவாஸிப் பிராமணன் சொன்ன பட்டரல்லது வேறு எவரும் துணிந்து நம்முன்னிலையில் வந்து கூசாது நின்று இப்படி தர்க்கபிக்ஷை கேட்கத் தரமுடையரல்லர்; ஆகையால், வேஷம் எளியதாயிருந்தாலும் இவர் அந்தப்பட்டரேயாகவேணும்' என்று நிச்சயித்து 'நம்மை வாத பிக்ஷைகேட்டீர்; நீர் பட்டரோ?' என்று கேட்க, இவர் 'ஆம்' என்று சொல்லி அதிகம்பீரமாக வேதாந்த விஷயங்களை எடுத்து உபந்யஸிக்கலானார். அவ்வளவிலே, அவர் முன்னமே பட்டர் மகிமையைக் கேள்வியுற் றறிந்திருந்தும் இவரது கல்விப் பெருமையை நேரிற்காணவேண்டுமென்று எதிர்வாதஞ் செய்யவே, இப்படி இருவரும் மதயானைகள் பொருமாறுபோல ஒன்பதுநாள் வாதப்போர் நிகழ்த்த, பின்பு பத்தாவது நாளிலே பட்டர் மாயிசித்தாந்தத்தைப் பலவாறு கண்டித்துத் தமது கொள்கையை நிலைநிறுத்தினர்.

(இன்னும் வரும்.)

# கல்வியின்பம்.

இயல்பிலே மக்களேயாக மிருகங்களேயாக அற்ப புல்பூண்டு விருக்ஷங்களேயாக எல்லாவுயிர்களும் இன்பத்தையே அவாவுவனவாம். இன்பம், ஊணின்பம் உடையின்பம் விளையாட்டின்பம் கூட்டவின்பம் ஏகாந்தவின்ப முதலியவாகப் பலவகைப்படும். அவ்வின்பங்களுள் கல்வியின்பமுமொன்றாம். கல்வியின்பத்தையநுபவிக்குமொருவன் சாமானிய ஜனங்களாற்கொண்டாடப்படும் ஊணின்பத்தையு முடையின்பத்தையும் விளையாட்டின்பத்தையும் பொருட்படுத்தான். அதுபற்றியே திருவள்ளுவரும் "செவிக்குணவில்லாத போழ்து சிறிது வயிற்றுக்கு மீயப்படும்" என்றார். அதுபற்றியே பாண்டியனும் "பிச்சை புகினுங் கற்கை நன்றே" என்றான். பிச்சையெடுத்துண்பதினுங் கொடியதும் எளியதுமாகிய அதிதுர்ப்பாக்கிய நிலை வேறில்லையன்றோ. அந் நிலையிலுமொருவன் கற்பானாயின் அவனை அக்கல்வியின்பமானது அத் துர்ப்பாக்கியநிலையை மறப்பித்துவிடுகின்றதென்றால், கல்வியின்பத்திற் கிணையான இன்பம் இவ்வுலகில் வேறில்லை. அதனையநுபவித்தவரே அவ்வுண்மையை அறிவார்கள்.

பூர்வத்திலே இருந்தவர்களது இயல்புகளையும் கதியையும் ஆராய்ந்தறிதலும், பல தேசங்களு மொருகாலத்தோங்கி ஒருகாலத் திற்றாழ்தலையும் அவற்றின் காரணங்களையுமறிதலும், உஷ்ணம் ஒளி வாயு முதலியவற்றின் இயல்புகளை யாராய்தலும், வானசோதிகளின் கதிகளையு மியல்புகளையும் அவற்றாற் பூமியிலுண்டாகும் வேறுபாடுகளையும் அவைக்கும் பூமிக்குமிடையேயுள்ள சம்பந்தங்களையும் அறிதலும், ஓரற்ப வுப்புக்கட்டியினது அற்புத ஆற்றல்களைஇரசவாதி எடுத்துரைக்கக் கேட்டலும், நாம் வசிக்கும் பூகோளம்போலு முலகங்கள்பல அளவிடற்கரிய நெடுந்தூரத்திலே யுளவென்பதும் அவ்வுலகங்களினின்றும் எம்மை நோக்கிப் புறப்பட்ட ஒளிக்கிரணங்கள், தாம் ஒருநொடியில் எத்தனையோ காதங்கடந்து செல்லும் வேகமுடையனவாகவும் இன்னும் நம் பூமண்டலத்தை யடையவில்லையென்றால் அவற்றின் தூரமெவ்வளவாகுமென அறி

*

தலும், பண்டை வித்துவரத்தினங்கள் செய்த நூல்களிலேயுள்ள கற்பனாலங்காரரசம் சொல்லிரசம் பொருளிரசம் சாதுர்யரசங்களாகிய சமுத்திரத்திலேறித் திரிதலும், அவ் வித்துவ ரத்தினங்களது வாக்கு வல்லபம் வாக்கு விஸ்தாரம் வாக்கு விச்சித்திரங்கள் என்னும் மாயாவிநோதத்திற் சிக்கிப் பரவசப்படுதலும், தார்க்கிகர்கள், கணந்தோறும் விகாரப்படுவதும் அநித்தியமாயுள்ளதுமாகிய பிரபஞ்சத்திற்கு மூலகாரணமொன்றுளதென நாட்டும் நியாயவாதப் பிரசண்டமாருதத்தில் எற்றுண்டுபோதலும் ஆகிய இன்னோரன்ன கல்வியின்பங்களை நினைக்குமபோது அவ்வின்பரசத்துக்கு நிகராகக் கற்கண்டோ தேனோ பாலோ பாயசமோ கனிரசமோ எதனைக் கூறலாகும். போசனரசங்களுக்கெலலாம் மேலாயதென்று புலவர் புகழ்ந்துகூறுந் தேவாமிர்தநானும அதற்கிணையாகாதன்றே. கல்வியின்பரசம் மற்றை யின்பரசங்களினும் மிக்கதென்பது கண்டே அவ்விரசத்தை அநுபவிக்கும்போது ஊண் வெறுக்கப்படுகின்றது; நித்திரை வெறுக்கப்படுகின்றது; கருமம் வெறுக்கப்படுகின்றது; பொல்லாத் தரித்திரம் மறக்கப்படுகின்றது; கொடுங்காரிருள் தாண்டப்படுகின்றது; ஆற்றுதற்கரிய கோபந் தணிகின்றது. புத்தியென்னும் கருவியினது இயல்பான குணம், அறிவுவளருந்தோறும் அதிலே லயப்பட்டுக் கிடந்து ஆநந்தித்து மலர்வதும், அறிவு விருத்திக்கு விரோதமாகிய விஷயங்களிலே அது நாள்தோறுங் கூப்பி ஒளியிழப்பதுமாம். ஒருகாலத்திலே விவேகிகளாய் விளங்கினவர்கள் அறிவு தேயத்தக்க துர்க்கிருத்தியங்களிலே தலையிட்டபோது தமது விவேகமெல்லா மிழந்து சாமானிய மூடர்களுக்கு மீடாகாது நிற்றல் உலகமறியுமன்றே. விவேகத்தினாலேயே மனுஷன் மற்றெல்லாப்பிராணிகளிலுஞ்சிறந்தவனாகி மேனிற்கின்றான். விவேகம் வளர்வது புத்தியை அறிவு விருத்திக்குரிய வழிகளிலே செலுத்தி அப்பொருட்சுவையை யூட்டும் வழியேயாம். முன்னைத் தவப்பேற்றினால் பிறவிச் செல்வர்களாயுள்ளார் சிலர் தாமுண்ணுமுறங்குங் காலம்போக மற்றைக் காலமெல்லாம் சூதாடல வீண்பேச்சு முதலியவற்றிலே தமது மனத்தைச் செலுத்துவர். தரித்திரராய்ப்பிறந்தவர்கள் சிலர் கல்வியின்பத்திலேயே காலத்தைப்போககுவர். முற்கூறிய செல்வர் தம்செல்வமும் மதிப்புமிழந்து ஈற்றிலே துர்ப்பா

க்கியர்களாகின்றார்கள். பிற்கூறிய தரித்திரர் மக்களுட்சிறந்த மதியூகிகளாய் மன்னர்க்கு இன்றியமையாத் துணைவராய் உயர்பதம்பெறுகின்றார். இது எதன்பயன்? மக்களை உயர்த்துதல் அறிவுக்கியல்பன்றோ?

கல்வியின்பத்திலே தன் மனத்தைச்செலுத்துபவன், துஷ்டவியல்புடையதாகிய மனத்தைத் தீயவிஷயங்களிலே செல்லவிடாமற்பிணித்தடக்கியாள்பவனாவான். அவ்வியல்புடையவர்கள் பெரும்பாலு முத்தமர்களாயே விளங்குவார்கள். அவர்கள் பிறரை வருத்தவும், அவர்பொருளை அவர் ஆக்கத்தைக்கண்டு பொறாமையுற்று ஏங்கவும் ஒழிவுகாணார்கள். அவர்கள் நாடுமின்பத்தினால் எவர் துன்பமடைகின்றனர்? ஓர் அரசன் மனோரதத்தினால் மற்றோரரசனும் அவன் நாடு சேனைகளும் அழிதல்போல அவர்கள் மனோரதத்தினால் யாவர் அழிக்கப்படுகின்றனர்? அவர்கள் செய்யுஞ்சாஸ்திர ஆராய்ச்சியினாலே நஷ்டமடைகின்றவர் யாவர்? அவர்கள் வெளியிடுமுண்மைகளைக் கண்டு உலகங் களிகூருகின்றதன்றோ. அவர்கள் செய்யுங் குற்றமொன்றுமாத்திரமுளது. அஃதாவது, பிறரெல்லாம் தாமநுபவிக்கு மின்பங்களுக்குப் பொருள்கொடுத்தனுபவிக்கக் கல்வியின்பத்தை அவர்கள் ஓரற்பப் பொருட்செலவுமின்றியநுபவிக்கின்றார்கள். மற்றையின்பமெல்லாம் பிறராற் கவரப்படுமியல்பினது; பிறர்க்கீயிற் குறையுமியல்பினது; தடைப்படுமியல்பினது. கல்வியின்பமோ பிறராற்கவரப்படாதது; பிறர்க்கீயக்குறையாதது; தடைப்படா வியல்புடையது. இத்துணைச் சிறந்த கல்வியின்பத்தை யாவருமநுபவிக்க முயலுதல்வேண்டும். தாம் ஜீவனோபாயத்தின்பொருட்டும் பரோபகாரத்தின்பொருட்டுங் கழிக்குங்காலம்போக, எஞ்சிய காலத்தையெல்லாம் கல்வியின்பத்திலே போக்குவார்களாயின், அது இம்மைமறுமை யிரண்டுக்கும் பயன்தருவதொன்றாதலின், மறுமையிலுமின்பத்தை யடைவார்கள் என்பதற்கு ஐயமேயில்லை.

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை.

ஸ்ரீ:

# கடைவள்ளலார்காலம்.

(௩௧௬-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

பங்களூர் ஸெண்ட்ரல் காலேஜ் போதகாசிரியர்
ஸ்ரீ: எஸ். கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள் M. A., எழுதியது.

1. சோழர்கள் இத்தகையோராக, இக் காப்பியங்களிரண்டின் செய்திகளும் நிகழ்ந்தகாலமுழுமையும், சேரதேசம், பெரியாற்றுத் துறைமுகத்துவஞ்சியில் ஆண்ட சேரன்செங்குட்டுவன் ஆட்சிப் பாலதேயாயிற்று. இக்காப்பியங்களிலும் இதற்குமுன்னெடுத்தாளப்பட்ட பிறநூல்களிலும் இவனுற்றற்பாடு விரிவாயுரைக்கப் பெற்றுள்ளது. இவன் தந்தையும் அவர்க்கிளையோனும் பதிற்றுப்பத்தினிரண்டாம் மூன்றும்பத்துக்களில் முறையே புகழப்பட்டுள்ளார். இவனருஞ்செயல்கள் கடற்கடம் பெறிந்ததும், இருவிசை கங்கைப் பேரியாற்றில் வடவாரியர்படை தந்ததும்,நேரிவாயில் வியலூர்களில் வென்றியடைந்து கொங்கர்செங்களம் வேட்டவைகளுமேயாம். தன் தந்தை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப்போலச் செங்குட்டுவனும் இமயப்பிடரில் விற்பொறித்ததாகச்சொல்லுவர்.

மதுரையைக் கருதின், சிலப்பதிகாரம், ஆரியப்படை தந்த நெடுஞ்செழியன்—அவனிறக்குங்காற் கொற்கையாண்டிருந்த விளஞ்செழியனிவ்விருபாண்டியரின் பெயரையே கூறும். இவ்விருபெயர்களையும் ஆராயப்புகுமுன் தமிழ்ச்சரிதத்தில் மிகவும் சிறந்தோங்கிய மற்றொரு பாண்டியன்பெயரை விசாரித்தல் அவசியமாகும். திருவள்ளுவர் தம்குறளைச் சங்கமேற்ற விழைந்துவந்தபொழுது, கானப்பேரெயிறந்து வேங்கைமார்பனைப் புறங்கண்ட உக்கிரப்பெருவழுதியே மதுரையாண்டவனென்பர். திருவிளையாடற்புராணமிவன் சில வற்புதச் செய்திகளை இயற்றியதாகக்கூறும். முன்னெடுத்துக்காட்டிய மேற்கோளில், ஆலங்காடு அல்லது ஆலவாயென்னும் மாங்காட்டில் வசிக்கும் மலைநாட்டுப் பார்ப்பனனொருவன், விஷ்ணுவாலய யாத்திரை செய்வான் உறையூரி லிராத்தங்கிப் பொழுதுபுலருங்காற்கோவலன் செவியுற இச்செய்திகளையே செப்பிப் பாண்டியனைப் புகழ்ந்

தோனுவன். இச் செய்திகள் அக்காலத்தரசாண்ட பாண்டியற்கேற் பனவல்லவாயின், திருமாலிருஞ்சோலைகண்டு மதுரையிற் றங்கிய பார்ப்பான் சொல்லல் சிறிதும்ஒவ்வாததாகும். சிலப்பதிகாரம் பாடிய இளங்கோவடிகள், இப்பாண்டியனை ஆரியப்படை தந்த பாண்டியன் நெடுஞ்செழியனென்றே கூறுவர். இவ்வாரியப்படை எற்றேனுமாகுக. இக்காவியத்தில் இவன் இமயமலையிற் கயல்பொறித்த செய்தி அனேகவிடங்களிற் குறிக்கப்பெற்றிருக்கிறது. சோழன் கரிகாலன், பாண்டியன் உக்கிரப்பெருவழுதி, இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் இம் மூவேந்தர்களும் தங்கள் இலாஞ்சனைகளை இமயத்திலியற்றிய பெரும்புகழாளிகளாகக் கூறப்படுவர். இச் செய்தி சிலப்பதிகாரம் 17-ம் காதையின் முதலிலுங் கடையிலும் அக்காலத்தாண்ட பாண்டியற்கேற்ப கூறப்பெற்றுள்ளது. ஆதலால், புராணங்களிலும் பழங் கதைகளிலும் வழங்கப்பெறும் உக்கிரபாண்டியனே சிலப்பதிகாரத்தில் ஆரியப்படை தந்த நெடுஞ்செழியனென்று வழங்கப்படுவோனென்பது ஒருவாறு துணியலாம். காலஞ்சென்ற ஸ்ரீமத்- கனகசபைப்பிள்ளையவர்கள் எழுதிவிடுத்த இன்பம் பயக்கும் "பதினெட்டு நூற்றாண்டின்முன் தமிழர்கள்" என்னும் வியாசத்தில் கரிகாலன் பேரனான கிள்ளிக்கு சமகாலத்தவனாக உக்கிரபாண்டியனை நிறுத்துவர். அற்றேயாயின், உக்கிரபாண்டியன்காலத்துச் சங்கமேறிய குறளினின்றும் இளங்கோவும் சாத்தனாரும் மேற்கோள்கொள்ள லியலாதாகும். அங்ஙனமேயாயின் பரணரைப்பற்றி ஔவைகூறியதாகக் கீழெடுத்துக்காட்டப்பட்ட கூற்று இவ்வொற்றுமையுடன் முற்றுமொவ்வும். ஏனெனில், அக்கூற்றின்படி அவ்விருவரிற் பரணரே முந்தியவராவர்.

அவன்மகனேபோற்றேன்று மிப்பாண்டியன்-நெடுஞ்செழியற்குப் பின்னாண்டவன், வெற்றிவேற் செழியனென்னும் பாண்டியனிளஞ்செழியன்; தன் தந்தை யிறக்குங்கால் கொற்கையாண்டிருந்து, இக்கதை நிகழ்ச்சிப்பருவத்திலேயே அரசவாழ்க்கை பெற்றேனுவன். இவன் கண்ணகி கடுங்கோபமாற்ற நூறு பொற்கொல்லரை உயிர்ப்பலியூட்டினனென்னுஞ் செய்தியொன்று தவிர, அவன் விஷயம் மற்றொன்றும் புலப்படவில்லை. ஒருகால் அவனாண்டகாலம்

சிறிதேயாய் ஒரு விசேஷமில்லாததாயு மிருந்திருக்கலாம். இவற்குப்பின் இரு பெருவேந்தரையும் ஏழு குறுநிலமன்னரையும் ஒருங்கே தலையாலங்கானத்துச் செருவில் வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனாண்டிருத்தல்வேண்டும். யானைக்கட்சேய் மாந்தரம் சேரலிரும்பொறையைக் கபிலர் புகழ்ந்துள்ளதாகப் பொருந்திலிளங்கீரனார் புறநானூற்று 53-ல் கூறியதை மேற்கோள் காட்டியுள்ளாம். இச்சேரன், இக்காலத்துக் 'கொயிலாண்டி' யென வழங்கும் குட்டுவன் தொண்டியை யாண்டோனெனவும், சேலம் ஜில்லா திருச்சிராப்பள்ளியெல்லைக் கருகிலிருக்கும் கொல்லிமலையை யாண்டோனெனவும் கூறுவர். சிலப்பதிகாரம் குன்றக்குரவையில் இவன்,

"வில்லெழுதிய விமயத்தொடு
கொல்லி யாண்ட குடவர் கோவே." என்று விளிக்கப் பெற்றுள்ளான். இந்நாட்டில் யானைக்கட்சேய் ஆட்சிபெற்றது, செங்குட்டுவன் கொங்கர் செங்களம் வேட்டு அருகிலுள்ள வியலூரில் வெற்றி பெற்று உறையூருக் கணித்தாகிய நேரிவாயிலில் ஒன்பது சோழரைப் புறங்கண்டதனாலேயன்றி மற்றியலாது. இச்சேய், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனாற் சிறைப்படுத்தப் பட்டான். இப்பாண்டியன் நெடுஞ்செழியன் தமிழ்க் கவியில் பெரும்புகழ்பெற்றுச் சங்கமிருந்தோங்கிய தமிழ்க் கவிஞரனைவரையும் தன்னவையிற் பெருமை பாராட்டியோனவன். பத்துப்பாட்டுள் மாங்குடி மருதனாரால் மதுரைக் காஞ்சியிலும், நக்கீரனாரால்நெடுநல்வாடையிலுஞ் சிறப்பிக்கப்பெற்று அக்காலத்து அரசர்களில் அநேகரைப்போலவே, தன் பாட்டனைப்போற் றானும் பாவன்மைவாய்ந்தவனாயிருந்தான். இவனைப்பற்றிய பாடல்கள் புறநானூற்றிற் பலவுள. இவ்வாராய்ச்சியால் இக்கதை நிகழ்ந்தகாலத்துப் புகாரிலாண்டவர்கள்- கரிகாலனும் கோக்கிள்ளியுமாவர் (இவ்விருவர்க்குமிடையே நலங்கிள்ளியென்பானை நிறுத்துவர் மகா-ா-ா-ஸ்ரீ கனகசபைப் பிள்ளையவர்கள்) என்றும், மதுரையையாண்டவர் உக்கிரபாண்டியனொடு ஒருமைப்படுத்தப்பட்ட நெடுஞ்செழியனும் அவற்குப்பின் வந்த இளஞ்செழியனும் அவன் பின்வந்த தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுமாவரென்றும், வஞ்சியில் இக்கால

மெல்லாமாண்டவன் சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகளுக்கு மூத்தோனாகியும் மணிமேகலையாசிரியர்க்கு நண்பனுமாகிய சேரன் செங்குட்டுவன் என்றும் ஒருதலை துணியப்பட்டது. யானைக்கட்சேய், இச்செங்குட்டுவனுடைய மகனாய்ப் புதிதாய்ப்பிடித்த நாடாட்சிக்கு நியமிக்கப்பெற்றவனாயிருத்தல்வேண்டும்.

ஔவையார் பரணர் கபிலரின்னோரன்ன இசை பெற்றுவிளங்கிய தமிழ்வல்லார் காலத்துச் செழிப்புற்றோங்கிய மூந்நாட்டு முடியுடைமன்னர் இவர்களேயாவர். செல்வப்பெருக்கில் இம்மூவரைத்தகைச்சிறப்பினரோ, கல்விப் பெருக்கிலம்மூவரைத்தகைச் சிறப்பினர். இவரன்றி அக்காலத்திய ஏனையகவிகளும் கவிவள்ளலாரும் அநேகர். அவ்வள்ளலாரில் பின்வருபவர்களைப் பற்றி முன்னமே கூறியுள்ளாம். இவர்கள் யாவரெனின்:—பறம்பு நாட்டையும் பறம்புமலையையுமுடையபாரி, மலைநாட்டுத் திருக்கோவலூரையும் முள்ளூர் மலையுமுடையான் காரி, துவரையில் முனிவன் தடவினுட்டோன்றியோர்வழிவந்து அரயத்துக்கதிபதியாய்த் தவத்திற்றங்கிய பெரியோரைப் பிழைப்பிப்பான் புலியைக் கொன்ற புலிகடிமாலிருங்கோவேள், மலைநாட்டு நல்லூர்க்கதிபதியான பழனியைச்சூழ்நாட்டையுடைய வையாவிக்கோப் பெரும்பேகன், தகடூரையும் குதிரைமலையையுமுடையனாய்ப் பதிற்றுப் பத்து எட்டாம் பத்திற் சிறப்பிக்கப்பெற்ற தகடூரெறிந்த பெருஞ்சேரலாற் சீரழிந்த அதியமா னஞ்சியுமேயாவர். இவர்களெல்லோரும் தத்தம் பெயராலும் சிறப்புற்ற செய்கைகளாலும் நல்லூர் நத்தத்தனாரால் சிறுபாணாற்றுப்படையில்வெகுவாய் நம்பவொண்ணாக்கற்பனைகளாற் சிறப்பிக்கப் பெற்றுள்ளார். இவர்கள் தவிர தொண்டிக்கும் கொல்லிமலைக்கும் அதிபதியாகிய யானைக்கட்சேய் விஷயமும் வரைந்துள்ளாம். பாவல்லோர்களில் முன்னரே எடுத்தாண்ட மூவர்களோடு இன்னுஞ் சிலரையும் ஈண்டுக்குறிப்பித்தல் வேண்டுவதாகுமாதலின்,மிகச்சிறப்புற்று இதுகாறும் தமிழகத்தில் அவரவர்பாகுபாட்டில் முதன்மைபெற்று விளங்கும் திருவள்ளுவர் இளங்கோவடிகள், சீத்தலைச்சாத்தனார், உருத்திரங்கண்ணனார், முடத்தாமக்கண்ணியார், மாங்குடி மருதனார், நக்கீரர் இன்னோரன்னோரைக் குறிக்காமற்போகவியலாது. கீழ்க்கூறியவள்ளலாரிற் சிலர் கவிவன்

மைவாய்ந்தவரன்றி, பாரிமகளிர் இருவரும் பாவல்லோரென்பதற்கு பாரியிறந்தபோது அவர்கள்பாடிய பரிதாபக்கண்ணிகளேதக்கசான்ரும். தவிர, பூதப்பாண்டியனுடன் தீப்பாய்ந்த அவன் றேவி பாடிய பாடலொன்று புறநானூற்றிலுண்டு. செங்குட்டுவன்காலத்து (எனின் அவர்க்கொருதலைமுறை முன்னும் பின்னும் சேர்ந்தாகியது) கல்விவளர்ப்பு மிகச்சிறப்புற்றோங்கியதாதலால் அதே மூன்ரும் சங்கம் மிகவுயர்வுற்றோங்கிய காலமாதல் வேண்டும் என்னும் கொள்கைக்கு இக்கவியாளர் பெயர்களே தக்க ஆதாரமாகும். இதினின்றும் குறள்வள்ளுவர், இளங்கோ சாத்தனரிவர்கட்கு வெகுவாய் முந்தியிருக்தலியலாதென்பதூம் கரதலாமலகமாகும். ஆயினும் இவ்விருவரும் குறளினின்றும் மேற்கோள்வழங்குவதெற்றோவெனின், குறள் சீத்தலைச்சாத்தரோடு கூடிய சங்கப்புலவரெதிரே ஓதப்பெற்று அவர்கள் நன்கு மதிப்படைந்திருப்பதே. இளங்கோவடிகளோ குறள் மேற்கோளெடுத்து வழங்கினும் இச்சங்கத்திற் சேர்ந்தவரல்லர். இக்காலத்திற்றனே பௌத்த மதம் மிகவுயர்வுற்று இதர பிற்காலத்திய மதத்திருத்தமுபற்சிகளைப்போல் தேசபாஷாபிவிருத்திக்குத் தூண்டுகோலாய் நின்றது. இத்தகைய புராதனநூல்களிற் சங்கமென்னும் பெயர்காணக்கிடைக்காதேயாயினும் மேற்கூறிய பாவல்லோரிலனேகர் ஏனையவள்ளலாருடன் வதிந்து தமிழ்வளர்த்தவரோயாயினும், தமிழ்வளர்ச்சி மதுரைக்கேயுரித்தாகப் பாராட்டப்பட்டு அம்மதுரை புறநானூறு சிறுபாணகளிலும் பிற்காலத்ததாகிய கலிங்கத்துப் பரணியிலும் தமிழ்க்கூடலென்று வழங்கப்பெற்றுள்ளது. சங்கத்தாரென்று தொன்றுதொட்டு வழங்கிவரும் நாற்பத்தொன்பதின்மருள் மேற்கூறிய கவிவாணர்களின் பெயர் அநேகம் காணக்கிடைப்பதால் அக்காலத்து மதுரையில் இத்தகைய சங்கமொன்றிருத்தல் வேண்டுமென்று துணியவிடமுண்டு.

மேற்கூறிய கலைஞருக்குச் சமகாலத்தவரான கவிவாணர்களைத் தேடித்திரட்டப்புகாமல் இத்தகைய தமிழ்ச் செழிப்பு எக்காலத்ததென்று ஆராயப் புகுவது செவ்வியதாகும். சிலப்பதிகாரமணிமேகலைகள் பௌத்தகாலத்தவைகளேயாயினும், பௌத்தக்கொள்கைகள் மணிமேகலையில் விசேஷித்துரைக்கப்பட்டுள்ளன. அக்காலத்திய

பிறநூலினும் பௌத்தசம்பந்தமான விஷயங்கள் ஆங்காங்குக்கா ணக்கிடப்பதனுல் பெருநூல்கள் கீழ்வருமாறு வைக்கப்பெறுவ து முறைமைபெற்றதாகும். அவைகளில் இருபெருங்காவியங்களில் மேற்கோளாக எடுத்தாளப்பட்ட குறளே முதன்மைத்தாம். சற்றே றக்குறைய அதேகாலத்தில் இயற்றப்பெற்ற சிலப்பதிகார மணி மேகலையென்னும் இருபெருங்காப்பியங்களுள் முந்தியது மணிமே கலையாம். குறளரங்கேறியகாலத்தவனுன உக்கிரபாண்டியனுல்அவன் காலத்திற்குமுன் வெவ்வேறுகாலத்தில் ஆங்காங்குப் பாடப்பெற்ற அகநானூறு தொகுப்பிக்கப்பெற்றதென்ப. குண்டலகேசியென்பது நமக்கு இதுகாறும் தெரிந்தமட்டும் பௌத்தவாதப் பண்பிற்றாய் மணிமேகலையைப்போன்றதொன்று. இதைக்கண்டிக்கமுயலும் நீல கேசிதருட்டை இதற்குப் பிற்காலத்ததாகப் புகலவேவேண்டும். செந்தமிழ்ப் பத்திராசிரியராற் சூசிக்கப்பெற்ற இத்தகைத்தமிழ்ப்பயி ற்சியின்போக்கு அங்கீகரிக்கப்பெற்று இப் பெரும்பயிற்சியின் கால மும் ஒருவாறு வரையறுககப் பெறுமேல், இக்கால வரையறையே தமிழ்ச்சரித காலவாராய்ச்சிக்கு இன்றியமையாதபற்றுகோடாம்.

ஒருவகைத்தான ஒலியும் பொருளும்பெற்ற பெயர்களே நிர ம்பி, வழிதுறை புலப்படா இக்காலத்திய தமிழ்க்கானத்தில் தனி மைபெற்று விளங்கும் சில பெயர்களையும் சிறப்புக்களையுங் கொண் டே ஒருவகைச் சார்புமின்றி யொருங்குபட்டமனத்தோடு ஆராய் வான்புகின், இத்தகை முயற்சி வீண்முயற்சியாகாது. கிள்ளியென் னும்பெயர் சோழருக்குப் பொதுப்பெயராயினும் கரிகாலனென்பது அத்தகைத்தன்று. செங்குட்டுவனென்பது தனிப்பெயராகவே தோ ன்றுகிறது. அப்படியே அவனண்பனுன கஜபாகுவின் பெயரும் இலங்கைச்சரிதத்திலடங்கிய 174-பெயர்களில் விக்கிரமபாகுவைப் போல் வெகுதரங் காணப்படாமல், இருவர்க்கே யுரித்தாகக்காணப் பெறுகிறது. பன்னிரண்டாம் நூற்றாண்டு முதலில் ஆக்கப்பெற்ற கலிங்கத்துப்பரணி கரிகால கோக்கிள்ளியரை முறைதிறம்பக்கூறிக் கிள்ளியை முதலும் கோச்செங்கணனையவர்க்குப் பின்னும் கடை சியாய்க் கரிகாலனையு மமைத்துக்கூறும். கரிகாலனுக்குமுன் மூன் றாந் தலைமுறையில் கிள்ளியென்பான் ஒருவன் உண்டென்பது புற

நானூற்றால் விளங்கும். அப்படியாயின், அக்காலத்திய சோழபரம்பரை கீழ்வருமாறு நிற்கப்பெறும்:—இளஞ்சேய்ச்சென்னி, அவன் மகன் கரிகாலன், அவன் பேரன் நெடுமுடிக்கிள்ளி. சயங்கொண்டாருக்குப் பின் வதிந்த பெரிய உரையாசிரியர்கள்போலவே, கலிங்கத்துப் பரணியும் கிள்ளி நாகலோகம்புக்ககதையைப்புகலும். இத்தகைத்தேயாயின், நாககன்னிகையை மணந்த கிள்ளி இன்னனென்பது தவறுபடுதற்கிடனுண்டு. இப்படியேயாயின் இமயத்திற்புலி பொறித்த கரிகாலன் முதலாங் குலோத்துங்கனென்பதும் அவன் மாமனார் இராஜேந்திரசோழன்காலத்து உறையூராண்ட அதிகாரியென்பதும் சற்றுமியலாது. தாம்பர சாசனங்களாலும் கல்வெட்டுக்களாலும் பின்னுளைய சோழபரம்பரையிற்கண்டமட்டும் பத்தாம் நூற்றாண்டிலிரண்டாம்பாகத்தில் வதிந்தவராய் வீரபாண்டியன் முடியை விளையாட்டாய்ச் செய்வித்தவரான ஆதித்தியகரிகாலனென்பான் பெயர் காணப்பெறும். ஆனால் கலிங்கத்துப்பரணியுடையார் இப்புலிபொறித்த கரிகாலனை வீரநாராயணன் அல்லது பராந்தகனென்பவனுக்கு மூன்றுபெயர் முற்படநிறுத்தியுள்ளார். ஆதித்திய கரிகாலனேவென்றால் இப் பராந்தகனுக்கு முதற்புதல்வனும் முதலாதித்தியனுக்குப் பேரனும் விளங்குபவன். ஆகையால், இக்கரிகாலனை கி. பி. தொள்ளாயிரத்துக்கு முன்னதாகவே பார்க்கவேண்டுமென்பது அத்தியாவசியகமாகிறது.

மேற்கூறிய பெருநூல்களாக்கியகாலம், அந் நூல்களினின்றுமே பௌத்தமதம் உயர்வுற்றோங்கியகாலத்து ஆக்கப்பட்டனவாகவேண்டுமென்பது முன்னரே காட்டியுள்ளாம். பௌத்தமதமோ சீனதேசத்தாராகிய யுவன்சுவாங் இந்தியாவில் யாத்திரைசெய்ததும் திருஞானசம்பந்தர் வதிந்தகாலமுமான ஏழாம் நூற்றாண்டினிடையே சீர்குலைந்தது. கி. பி. எழுநூற்றைம்பதாமாண்டளவில் குடந்தைக் (கும்பகோணம்) கருகில் உள்ளதாகிய திருப்பரம்பியத்தில் வரகுணபாண்டியனுக்கும் பாஸ்ச்சிமகங்கவம்சத்தவனான சிவமாரனுக்கும் போர்விளைந்தது. சோழர்கள் பிரபலம்பெற்றவர்களாயிருப்பின் இவ்விடத்தில் இப்போரியலாது. தவிர, இக்காலத்திய நூல்களினின்றும் கங்கர் அவ்வளவுயர்வுற்றவராயிருந்ததாகத்தெரி

யவில்லை. இக்காலமோ சரித்திரவாராய்ச்சியால் சமுத்திரகுப்தனு க்குச் சமகாலத்தவனான காஞ்சியரசன் விஷ்ணு கோபன்காலமுதல் (சுமார் கி. பி. 500-முதல்) உயர்வுற்றோங்கிய பல்லவருடைய சீர் குறைவுறுங் காலமாகிறது. அத்தகைய பல்லவர் பெருமை யாம் கண்டமட்டும் சங்கநூல்களிற்றோன்றவில்லை. அக்காலத்தில் நமக் குப்புலப்பட்ட தொண்டைமான் ஒருவன் காஞ்சியில் சோழவதிகாரி யாய் வதிந்தனன். ராயக்கோட்டா சாசனங்களில் விஷ்ணுகோபனு க்கு மிகப்பழையனான ஸ்காந்தசிஷ்யனென்னும் பல்லவ அரசன் ஒரு நாககன்னிகை வழியாய் அசுவத்தாமன் மரபிலுதித்ததாய்ப் புகழ்ந்துகொள்வது காணலாம். இதினின்றும் இளந்திரையன்பிறப்பு இக்காலத்திலேயே மறக்கப்பெற்றது, நம்பத்தக்கதாகச் சொல்லிய இக்கதையாற்றெளிவுறும். இவைகளையெல்லாம் யோசிக்குமளவில், கரிகாலன் இக்காலத்துக்கும் முந்தியவனாதல்வேண்டும். தொன்று தொட்டுவந்த கதைகளிலும் இவன் புகாருடன்சேர்த்துப் புகழப்ப ட்டுளான். மணிமேகலையில் இவன் பின்னோனான கிள்ளியின்கால த்திற் புகார் கடல்கொண்டதென்பது தெற்றெனத் தெளிவித்துள் ளது. புறநானூற்றுப்பாடல்களில் வெவ்வேறு அடைகள் பெற்றுவ ழங்கப்படும் கிள்ளிகளெல்லாம் உறையூரிலிருந்ததாகவேயன்றிப்புகா ருடன் புகலப்பெற்றுளர். சிலப்பதிகாரத்திலும் உறையூர் ஒரு பே ரூராய் வழங்கப்பட்டிருப்பதன்றி, சிறுபாணாற்றுப்படையிலுங்கூட புகார் வழங்கப்பெறாதது வெகு முக்கியமான விஷயமென்பது பின் தெரியும்.

(இன்னும் வரும்)

# "பொருட்பெண்டிர்"

## என்னும் திருக்குறள்.

வரைவின்மகளிரது இயல்பை எடுத்துரைக்கும் கூஉம் அதிகாரத்திலே அவரது சொல்லும் செயலும் பொய்யென்பதை முதற்கண் கூறவந்த திருவள்ளுவநாயனார், முதலிரண்டு குறள்களால் அவரது சொல்லின் தன்மையை நன்கு விளக்கிப், பின்பு மூன்றாவது குறளில், அச்சொல்லால் மயக்குற்ற ஆடவர் அவர்பால் விரும்பும் செயல்களுள் தலைமையான முயக்கத்தின் பொய்ம்மையை ஓர் உவமானத்தால் காட்டியிருக்கின்றார். அக்குறள் வருமாறு: "பொருட் பெண்டிர் பொய்ம்மை முயக்க மிருட்டறையி, லேதில் பிணந்தழீஇ யற்று". உரையாசிரியர் பரிமேலழகர், "கொடுப்பாரை விரும்பாது பொருளையே விரும்பும் பொதுமகளிரது பொய்ம்மையையுடைய முயக்கம் பிணமெடுப்பார் இருட்டறைக்கண்ணே முன்னறியாத பிணத்தைத் தழுவினாற் போலும்" என்று இதற்குப் பதவுரைகூறி, "பொருட்கு முயங்கும் மகளிர் கருத்துஞ் செயலும் ஆராயாது சாதியும் பருவமும் ஒவ்வாதாரை முயங்குங்கால் அவர்குறிப்புக் கூலிக்குப்பிணமெடுப்பார் காணப்படாததோரிடத்தின்கண் இயைபில்லாததோர் பிணத்தை எடுக்குங்கால் அவர் குறிப்போடொக்கு மெனவே, அகத்தால் அருவராநின்றும் பொருளுக்காகப் புறத்தாற்றழுவுவர்; அதனையொழிகவென்பதாம்" என்று விசேடவுரையும் வரைந்து முடித்தனர். இவ்வுரையில் நெடுநாளாய் எனக்குச் சிலசந்தேகங்களுள: கூலிக்குப் பிணந்தூக்குவார் தமதுவேலையில் மிக்க அருவருப்பைக் கொள்வதை எங்கும் காண்கிலம்; உற்சாகத்தோடு போட்டி போட்டுக்கொண்டு குதித்துக்குதித்தோடுவதைப் பலவிடங்களிற் காணலாம். பிணம் இருட்டறையிற் கிடப்பதும் கூலிக்காரர் ஆங்குற்று எடுத்துச்செல்வதும் மரபன்று! இராப்பிணங்கிடந்தால் விளக்குண்டே; எவ்வளவோர் ஏழையாகினும், பிணத்தை வீட்டு வாசல்வரை உறவினர் எடுத்து வருவதன்றோ வழக்கம்; கூலிக்காரர் தூக்குவதெல்லாம் தெருவாசலிலிருந்து மயானத்துக்கே யன்

ரோ; காலொருவர் தலையொருவராகத் தூக்கி ஆசந்திமேற் கிடத்தித் துணிகொண்டு மூடிக்கட்டி ஆசந்தியை தந்தோள்மேற்பட எடுத்துச் செல்லும் செயலை எவ்வாறு தழுவுதலுக்கு ஒப்பிடுவது? முன் முயக்கத்தோடு முற்றும் பொருந்தப் பின்னடியில் "தழீஇயற்று" என்று கூறிய நாயனார் பிணம் 'எடுத்தலையோ' குறித்திருப்பார்? இத்தகைய ஐயப்பாடுகளாற் பொருள் நன்கு விளங்காமல், பரிமேலழகர் கூறியவே பிழைத்ததாகத் தோற்றியவிடத்து என்சிற்றறிவு சிறிதும் நுழையமாட்டாமல், இதுகாறும் திகைத்திருந்தேன். இம்மலையாளதேசத்திற்கு வந்த பின்னர்ச் செவியுற்றதோர் வழக்கம், நாயனாரது மெய்க்குறிப்பையும், அவ்வழக்கத்தைத்தெரியாது உரையாசிரியர் பொருளுரைத் தமையையும் நன்கு துலக்கியதாக, இதை எழுதப்புகுந்தேன். இந்நாட்டிலுள்ள ஒருவகைப் பிராமணர்களுக்குள், மற்றெங்கும் மறையவர்க்குள் இல்லாத சில வழக்கங்கள் நடைபெற்று வருகின்றன. அவற்றுள் ஒன்று, ஒவ்வொரு குடும்பத்திலும் மூத்தகுமாரன் மட்டுமே சாஸ்திரோக்தமான விவாகம் செய்து கொள்ளுதல்; அவன் தம்பிமாரெல்லாம் சூத்திரஜாதிஸ்திரீகளோடு "சம்பந்தம்" வைத்துக்கொள்வதே மரபு. இக்காரணத்தால், பிராமணப்பெண்களில் அநேகர் விவாகமாகாத கந்நிகைகளாகவே தம்வாழ்நாளையெல்லாம் கழிக்கநேரும் என்பது கூறாமே விளங்கும். அவ்வாறிருந்துபோதல் இவர்க்குள் ஓர் இழுக்காக எண்ணப்படுவதில்லை. ஆயின், விவாகமன்றி மரித்த ஸ்திரீ சுவர்க்கத்தை அடையாள் என்ற அபிப்பிராயமும், சுவர்க்கத்தை அடைதற்குத் தாலிக்கட்டு மட்டுமேயன்றிக் கந்நியழிவும் அவசியம் என்ற அபிப்பிராயமும் ஏறக்குறையப் பரவியிருப்பதாகவும், அதனால், எவ்வளவு வயதானவராயினும் கந்நிகைகளாய் ஸ்திரீகள் மரித்தால், வேறு சிலபிராமணருக்கு ஏராளமான பொன் கொடுத்து, அப்பிணங்களுக்கு விவாகமும் கந்நியழிவும் இரகசியமாய் நடத்துவது வழக்கமென்றும் சொல்லப்படுகிறது. இவ்வழக்கத்தையே குறளாசிரியர் குறிப்பிட்டார் போலும். இவ்வுவமானம், எவ்வளவோர் பொருத்தமுடையதாய் இப்பொழுது தோற்றுகின்றது! பொதுமகளிர் முயக்கத்தை விரும்பிச்செல்லும் புருஷன் தன்மனம்கொண்டு பிறர்மனம் அளக்கும் மானிடசுபாவத்தால், த

ன்னோடொத்த இன்பமேயன்றிப் பொருளையுங்கூடப்பெறும் அவ்வேசை தன்னை உள்ளன்போடுமுயங்குவாள் என்று நினைத்து மயங்குதல் இயல்பு; அவ்வாறன்றித் தன்னை மிகவும் அருவருப்பாள் என்று துணிதலோ அருமை; ஆசிரியர் கருத்தோ, பிற்கூறிய அருவருப்பே மெய்யென்பதை அவனை அறிவுறுத்துவது! அதனாலன்றோ, இந்த உவமானத்தை யெடுத்துக்கூறி, ஒருபுருஷனுக்கு மற்றோர் புருஷனது மனப்பாங்கை உன்னியுணர்தல் எளிதாதலின் பொருளைவிரும்பி இத்தொழிற்குடன்படும் ஓர் புருஷனது மனக்கிலேசமும் வெறுப்பும் எவ்வாறிருக்கும் என்று நினைந்துபார், உன்பொருளையே விரும்பி உன்னைத்தழுவும் கணிகைக்கும் உன்மாட்டு அத்துணை அருவருப்பேயிருக்கும் என்று உறுதியாய்க்கொள், என்று சுட்டிக்காட்டியிருக்கிறார். அத்தொழிலைச் செய்வார் வேறு வகுப்புப் பிராமணராயிருத்தலும், நம்பூரிஸ்திரீகள் பரபுருஷன்முகம் பாராத "கோஷா'' க்களாயிருத்தலும், "ஏதில்'' என்று பிணத்துக்குக் கொடுத்த அடைமொழியை நன்கு விளக்குகின்றன. இவ்வழக்கம் இக்காலத்தில் அநுஷ்டிக்கப்படவில்லை யென்றும் கூறப்படுகிறது; பரிமேலழகர் காலத்திலேயே ஒருவேளை நின்று போயிருக்கலாம்; தாலிக்கட்டு மட்டும் இன்றும் சிலவிடங்களில் இரகசியமாய் நடத்தப்படுகிறதாம்.

பாலக்காடு
18-7-06

அ. மாதவையர்.

# பத்திராசிரியர் குறிப்பு.

ஸ்ரீமாந்-மாதவையரவர்கள் 'பொருட்பெண்டிர்' என்னுங்குறட்கு மேற்கூறிப்போந்தவுரையால் நமக்குச் சிலபுதுச்செய்திகள் தெரியவருகின்றன. அக்குறட்குப் பரிமேலழகருரையின்வேறாக அவர்கள்கூறியபொருள், ஒருவாறு பொருந்துவதென்னலாம். ஆயினும் வள்ளுவனார் திருவுள்ளம் அதுவேயென்று துணிதற்கண் தடைகள்பல இடையுறுகின்றன. மலைநாட்டுவழக்கமாக ஐயரவர்கள்காட்டிய ஆடவர்பெண்பிணந்தழுவும் செய்தி, வள்ளுவர்காலத்தே பிரபலம் பெற்றிருந்ததாயின், அதனைக்குறிக்கும் பழையமேற்கோள்கள் வடமொழியிலேனும் தென்மொழியிலேனும் உண்டா? இவ்வொழுக்கமுடைய பார்ப்பார் மலைநாட்டிற் குடியேறியது, திருவள்ளுவர்காலத்துக்குமுன்பேயென்பது உறுதிதானா? எல்லார்க்கும் ஒப்பனவற்றையேயெடுத்துரைக்கும் திருவள்ளுவர், எங்கோவுள்ள சிறுபாலாரது வழக்கமொன்றை உவமையாக ஆண்டனரென்றல் ஏற்பதா? இனி, ஏதில்பிணமாவது முன்னறியாததும் இயைபில்லாததுமாகிய பிணம் என்று உரையாசிரியர் கூறுதலால் அது அநாதப்பிரேதமென்பது தெளியப்படுவதாக, ஐயரவர்கள் வீட்டுப் பிரேதமென்றே கொண்டதென்னை? யாண்டோகிடக்கும் அவ்வநாதப்பிணத்தைக் கூலிக்கெடுப்பவர் அதனியல்புமுதலியன அறியாமையால் அகத்தால் அருவருப்பரென்பதில் தட்டுமுண்டோ! கூலிக்குப்பிணமெடுப்பார் மகிழ்வதென்று ஐயரவர்கள்கூறியதெல்லாம் தாம்பெறும்பொருளை நோக்கியேயன்றிப் பிணத்தைநோக்கியன்றே. பெண்பிணந் தழுவற்கண்ணும் மிக்கபொருள் கிடைக்குமாயின், அதனை மகிழ்ந்து செய்ய ஆடவர் முந்துவரன்றோ! அது எதுகருதி? ஆகவே, பொருள் கருதியுவப்பும் செயல்கருதி அருவருப்பும் அவ்விருவர்க்கும் ஒக்குமென்றே துணியற்பாற்று. இவற்றால் அநாதப் பிணமெடுப்பாரிடத்துமட்டும் அருவருப்பின்மைகூறி, பெண்பிணந்தழுவுவாரிடத்து அஃதுண்மை கூறுதல் ஏற்காததாம், அநாதப்பிணம், தேடிக்காணும்படி மூலைமுடுக்குக்களில் ஆதரவற்றுக் கிடப்பதாகலின், அதற்கு விளக்குமுதலியன அமைதல் இயையாமையுணர்க. இதுபற்றியே, 'இருட்டறை' யென்பதற்கு 'காணப்படாத

தோரிடம்' எனப்பரிமேலழகர் கருத்துரைகூறினார். கூலிப்பொருட்டு, தெரியாதவிடத்திலுள்ள ஏதில்பிணமெடுப்பவர்க்கு அகஅருவருப்பு மிகுதியுமுண்டாவது, அவர்செயலின் முதனிகழ்ச்சியாகிய தழுவற்கண்ணேயாதலால், அவ்வருவருப்புத் தணியவரும் பின்னிகழ்ச்சியாகிய 'எடுத்தலை' ஆசிரியர் கூறுவாராயினர். தழுவுதல்—எடுத்தற்பொருட்டுக் கைபாலணைத்தல். ஆடவர் பெண்பிணந்தழுவற்கண்ணும் இத்துணையேயன்றி இதனையிறந்துபொருள்கோடல் அசங்கதமேயாகும். சுருங்கச்சொல்லின், 'ஏதில்பிணந்தழீஇ யற்று'என்பதில் 'ஏதில்' என்னும் அடையால் அநாதப்பிரேதம் என்பதே பரிமேலழகர் கருத்து எனக்கொள்ளவல்லார்க்கு அவருரைப்பொருளில் யாதொருகுற்றமுந் தோன்றாது என்னலாம். இவ்வாறு 'ஏதில்பிணந்தழுவல்' என்னும் செய்கை, கிரகஸ்தனைக் குறிக்கும்,

> "துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
> இல்வாழ்வா னென்பான் றுணை.

என்னுங்குறளில் வரும் 'இறந்தான்' என்பானுக்குரிய ஈமக்கடன் செய்தற்கண்ணே நிகழ்வதாம். இவற்றால், ஐயரவர்கள் கூறியபொருளே திருவள்ளுவர்கருத்து எனத்துணிதலும், பரிமேலழகருரைப் பொருளில் ஐயுறுதலும் கூடாதவையாகின்றன.

# பாண்டியசாஸனங்கள்.

[ஸ்ரீ: து. அ. கோபிநாதராயரவர்கள், M. A., எழுதியது.]

———:o:———

சிதம்பரத்து நடராஜசுவாமிகோயிலின் வடகோபுரம் தவிர்த்து மற்றமூன்றுதிக்கிலுமுள்ள பெரியகோபுரங்கள் பாண்டியர்களால் கட்டப்பட்டவை. இவைகளின் இருசுவர்களிலும் இரு பாண்டியர்களின்செயல்களைப் பாக்களால் வர்ணித்திருக்கிறது. இவ்வாறு புகழப்பட்ட பாண்டியர்கள் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன், விக்கிரம பாண்டியன் எனப்படுவார்கள். இவர்களில் முதலவன் உத்தேசம் சக 1172 ல் இருந்தவன். இவன் சேரசோழர்களைவென்று, கண்ணனூரென்று பெயர்படும் (இப்போதிய சமயவரம்,) [1] பட்டணத்திலாண்ட பொய்சள அரசனையும் தோல்வியடைவித்து, மகதையாகிய நடுநாடு கைக்கொண்டு காடக (Cuttack) தேசத்தரசனையும் ஆந்திர தேசத்தரசனையும் ஜயித்து வெகு செல்வத்தோடும் பெருமையோடும் ஆண்டவனென்று விளங்குகிறது. இவன் காலத்திருந்த சோழன் மூன்றாம் ராஜேந்திர சோழனாகவேண்டும். இவனைப்பாதுகாத்து வருவான்போல வேடந்தரித்து பொய்சள வீரசோமநாதன் கண்ணனூரில் கோட்டைமுதலிய கட்டிக்கொண்டு இராச்சியமாளத் தலைப்பட்டான். இச்சோமநாதனைத்தான் சுந்தரபாண்டியன் வென்றிருக்கவேண்டும். பின்னும் காஞ்சியில் அருளாளப்பெருமாள் கோயிலில் பல சாஸனங்களையுடைய விஜயகண்டகோபாலனை ஜயித்ததாகச் சொல்லியிருக்கிறது. கூடலூர்ஜில்லாவில் திருவயிந்திரபுரத்தினருகிலிருக்கும் சேந்தமங்கலத்து அவனியாளப்பிறந்தான் கோப்பெருஞ் சிங்கன் கோட்டைகட்டிக்கொண்டு பிரபலமாயாண்டு மூன்றாம்இராஜராஜனை கபடமாய்ப்பட்டத்தினின்று நீக்கித்தான் சிலநாள் சோழமண்டலத்தையாண்டானென்று முன்னமே செந்தமிழ்வாயிலாய்க்கூறியிருக்கிறேன். அவன் தானேஅன்றிஅவன்

---

1 திருச்சிராப்பள்ளிக்கு ஏழுமைல் வடக்கிலுள்ளது.

வம்சத்தவர்கள் எவரோ இச்சுந்தர பாண்டியனால் எதிர்க்கப்பட்டுத் துயரமடைந்தார்கள். இச்சுந்தரபாண்டியன் காஞ்சியில் வீராபிஷேகமும் அரங்கத்தில் பட்டாபிஷேகமும் செய்து கொண்டானென்றும் விளங்குகிறது. இவன் இவ்விரண்டு இடங்களிலும் பன்முறை துலாபாரம் ஏறினன் என்று கூறியிருக்கிறது. இவன் ஏறிய துலாக்களின் படங்களையும் சிதம்பரத்துக்கோயிலின் தென் சுவரிற் காட்டியிருக்கிறது. இப்பாண்டியன் ஸ்ரீவைஷ்ணவஆசார்யர்களான பட்டர் நஞ்சீயர்காலத்தானகவேண்டும். இவன் கடாகதேச முதலியன ஜயித்துத்திரும்பிவந்து திருவரங்கத்துக்கோயிலை முற்றப் பொன்வேய்ந்தானென்று, இவனால் ஸ்ரீரங்கத்துப் பதிக்கப்பட்டுள்ள ஒருபெரிய சாஸனமும், மற்றும் அடியிற் கொடுத்துள்ள சிறு சிறு சாஸனங்களும் கூறுகின்றன. இதனால் இவன் ஹேமாச்சாதன ராஜாவென்று அழைக்கப்பட்டான். இவைகளையே குறித்து திருப்புட்குழியிலிருந்தெழுதப்பட்டுள்ள இரண்டு சாஸனங்களும் புகழ்கின்றன. இவன் செயல்களையெல்லாம் விரிவாக இவ்வரசனுடைய ஸ்ரீரங்கசாஸனத்திலும் [1] அடியில் வரைந்துள்ளமெய்க்கீர்த்தியிலும் கண்டுகொள்ளலாம்.

இச்சுந்தரனுக்குப்பின் விக்கிரமபாண்டியன் முடிசூடியிருக்க வேண்டும் என்று பலகாரணங்களால் தோற்றுகிறது. இவன் புவநேகவீரன் என்னு மறுபெயர்பூண்டவன் என்று சாஸனங்கள் கூறுகின்றன. இவன் கச்சியைக்கொண்டான் என்று சிதம்பரத்து ஐந்தாஞ்சாஸனம் கூறுகிறது. அன்றியும் இவன் பொருதகாலத்து வெள்ளாறு, குருதியோட்டத்தால் செவ்வாறுயிற்று என்று மற்றுமோரிடத்துக் கூறியிருக்கிறது. இவனும் வேணாட்டரசையும், காகதீய கணபதியையும், விஜயகண்டகோபாலனையும் வென்றதாகப் புகழ்ந்து கொள்ளுகிறுன். இவன் சாரிகைக்கோட்டையில் மடிந்தானென்று மன்னார்கோயில் சாஸனம் ஒன்றால் தெரிகிறது.

---

1 Ep. Ind. Vol, IV.

# சிதம்பரசாஸநங்கள்.

## I. சிதம்பரத்து நடராஜர்கோயில் கீழ்க்கோபுரத்து வடசுவரில் எழுதியுள்ளது.

1. இனவஸ்ரீகிம்புரிவெண்பி றைக்கோட்டிகல்வெங்கடுகட்
2. சினமத்தவெங்கரிச் சுந்தரத்தேன் 3. னவன்றில்லைமன்றில்
வனசத்திரு 4. வுடன்செஞ்சொற்றிருவைமணந் 5. தநொ
கனகத்துலையுடன்முத் 6. துத்துலைகலந்ததுவே. [க்குந்

## II. மேற்படியிடத்திலே எழுதியுள்ளது.

1. வட்டவெண் குடைமன்னர்தம் புகல்கொண்டுமாமுடிகொ
ண்டுபோர் 2. மாறுகொண்டெழு போசளன் தடை
கொண்டுவாணனைம்புகத்,

தொட்ட 3. வெம்படைவீரன் வெற்றி புனைந்த சுந்தரமாற
ன்முன்சூழவிட்ட 4. தெலிங்கர்சேனைமேல் துணித்துவெ
ன்றகளத்துமேல்

விட்டவெம்பரி 5. பட்டபோதெழு சோரிவாரியையொ
க்குநேர்மேல்மிதந்தநிண 6. ப்பெருந்திரள் வெண்ணுரைத்
தி ]ளொக்குமுன்
பட்டவெங்கரியந் 7. தவாரிபடிந்த மாமுகிலொக்கும் வீழ்ப
ருமணிக் குடையங்குவந் 8. தெழுபருதி மண்டலமொக்கு
[மே—

## III. மேற்படி இடத்திலேயே எழுதியுள்ளது:—

காறேற்றதண்டலைக்காவிரிநாடனைகானுலவுந்—
தேரேற்றிவிட்டசெழுந்தமிழ்த்தென்னவன்சென்றெதிர்ந்து
தாரேற்றவெம்படை யாரியந்தண்டுபடத்தனியே
போரேற்றுநின்றபெருவார்த்தையின்னும்புதுவார்த்தை
[யே—

*IV.* மேற்படியிடத்திலேயே எழுதியுள்ளது:—

மண்பட்டமேனி மொழிபைந்தொடி கொங்கைபரக்கவை
[வேற்
கண்பட்ட முத்தவடங்கண்டுங் காக்கிலன் காடவர்கோ—
னெண்பட்டசேனை யெதிர்பட்டொழுக வெழுந்தபுண்ணர்
விண்பட்டலையப் படைதொட்ட சுந்தரபாண்டியனே—

[வெண்பா. *]

*V.* 1. ஸ்வஸ்திஸ்ரீ பார்செய்தமாதவத்தாற்பஞ்ச—
2. ... .. ... ரசெய்விக்—
3. கிரமபாண்டிய[ற்]கு ... ரசெய்து, கச்—
4. சிகொண்ட கைதயற்கு ... ரல்சிவநதசெம—
5 மன்ன, ருச்சிகொண்ட பூநதாதுறைத்து.

அதேயிடத்தின் தென்சுவரில்.

*VI.* 1. ... ... ... ஞறனருகமா நடந்ததூளி
2. ... ... ... மண்ணுறையவிட்டதே
3. ... ... ... [ய]ளியூதுந்தார் விக்கிரம—
3a ... ... ... [ரா]யரைத்தான்முனிந்த.
4. ... ... ... ரக்கடம்பொழிமால்
5. ... ... ... கவீரன்துங்கப்புர—
6. [வாது?] ... தமண்டலநதொல்லுலகி—
7. தங். டகுரிய குலத்தினுக்குத்தலையா—
8. ய்விளங்கு மங்குற்றிகழ் சந்த்ரமண்டல—
9. மெயன்றிமற்றில்லையே.

அதேயிடத்தின் தெற்குக் கதவுநிலை.

*VII.* 1. ஸ்வஸ்திஸ்ரீ—மீளாவழிசெல்ல—
2. வேணுடர்தங்களைவென்றதட—
3. [ந், தே]ரளான் மதுரைமன்சுந்த—
4. ரபாண்டியன் சூழ்ந்திறைஞ்சி, ய—
5. ரளானமன்னவர்தன் னேவல் செ—

6. ய்யவவனிமுட்ட, வாளால்வழிதிற—
7. ந்தான் வடவேந்தரை மார்திற—
8. ந்தேவ (1) கோங்கருடல்கிழிய—
9. க்குத்தியிருகோட் [டெ] டடுத்து, வெ—
10. ங்கணழலில் வெதுப்புமே, ம
11. ங்கையர்கண், சூழத்தாமம்பு
12. ணையுஞ் சுந்தரத்தோள்மீனவ—
13. னுக், கீழத் தானிட்டஇறைவ (2)
14. வாக்கியல் செந்தமிழ்ச்சுந்—
15. தரபாண்டியன் வாளமரில், வீ—
16. க்கியவன்கழற்கண்ட கோபா—
17. லனைவிண்ணுலகிற், போக்கி—
18. யபின்பவன்தம்பியர்போற்ற
19. ப்புரந்தரசி, லாக்கியவார்த்தை—
20. பதிநூலுலகமுமானதுவேவ 1.

## அதேயிடம்.

VIII. 1. ஸ்வஸ்திஸ்ரீ—மீனவற்கு விக்கிரமபா—
2. ண்டியற்கு வேந்தரிடும்,யா—
3. னை திருவுள்ளத்தேறுமோ,
4. தானவரை, வென்றதல்லவே—
5. மணி நிறம்வெள்ளையல்ல
6. செங்கனகக், குன்றநல்லநா—
7. லல்லகோடு. 2.

## வடபக்கம்.

IX. 1. ஸ்வஸ்திஸ்ரீ—எந்துமருவியிரவிபுரவி
யின்முன்—
2. பூந்துவலைவீசும்போதியிலே—காந்து
சின, வே—

(1) கட்டளைக்கலித்துறை (!) (2) வெண்பா

3. ஞடணைவென்ற விக்கிரமபாண்டியன் மெய்ப், பூ
4. ஞாரம்பூண்டான்பொருப்புவட புயலுந்தருவும்
5. பொருகைப்பு[வ]நேகவீரபுனல், வயலுந்தரளந்த—
6. ருகொாற்கைகாவலவாரணப்போர், முயலுங்க—
7. ணபதிமொய்த்த செஞ்சோதிமுகத்திரண்டு, கய—
8. லுண்[டெனு]மதுடு[வ]ாமுனிவாறியகாரணமே.
9. வெங்கண்மதயானை விக்கிரமபாண்டியனே,
10. பொங்கிவடதிசையிற்போகாதே, யங்கிருப்பாள்—
11. பெண்ணென்று மீண்டபெருமாளேபேரிசையா—
12. ழ்ப், ப(ண்)ணென்றும்வேய்வாய்பகை.

அதேயிடம் கதவுநிலை.

X. 1. [1] ஸ்வஸ்தி ஸ்ரீ—ஆ(லி)லிலைக்குள்ளடங்கியமாயன—
2. வனியெல்லாஞ்,சேலிலடக்கி(ய......)
3. ......வேந்தர்தம்மை......
4. விலடக்கிவையந்தொழுதென்......ண—
5. முன்னைக், காலிடக்குவனந......
6. தொழிகாற்கடலே.

எஞ்சிய பகுதி சிதைந்துளது.

---

(1) மதுரையில் சோமசுந்தர ஸ்வாமிகோயில் மேலைக்கோபுரத்தில் இப்பாட்டையே வரைந்துள்ளது. அதனைச் செந்தமிழ் (Vol. I. P. 469.) லும் காண்க. இப்பாட்டு சாஸநத்தில் அடியில் வருமாறு எழுதியிருக்கிறது.

1. ஆலிலைக்குளடங்கிய மாயன் அவநி—
2. எல்லாஞ்சேலிலடக்கிய செண்பகமாற—
3. ந்தெவ்வேந்தர் தம்மை வேலிலடக்கியவை—
4. ய்யந்தொழுதென்னன் மீண்டுமுந்நை—
5. க்காலிடக்குவன் கா(ண)த்த(கு)தொழி(ற்)காற்—
6. கடலே—

## சிதம்பரம் நடராஜர் கோயில் பிராகாரத்தின் தென் சுவர்.

XI. 1. [illegible]

2. [illegible]

3. [illegible]

4. [illegible]

XII. 1. [illegible]

2. [illegible]

3. [illegible]

XIII. 1. [illegible]

2. [illegible]

3. [illegible]

4. [illegible]

## ஸ்ரீரங்கத்து சாஸனங்கள்.

### ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயில் மஹாமண்டபத்தின் முன்னுள்ள தூணொன்றில்.

---

1. [illegible] [*॥]

2. [illegible]

3. [illegible]

4. [illegible]

5. [illegible]

6. [illegible] [1*] [illegible]

7. [illegible]

8. [illegible]

9. [illegible]

10. [illegible]

11. [illegible]

அதேயிடத்து இரண்டாங் தம்பத்தில்.

1. [illegible]

2. [illegible]

3. [illegible]

4. [illegible]

5. [illegible]

6. [illegible]

7. [illegible]

8. [illegible]

9. [illegible]

10. [illegible]

(இன்னும் வரும்.)

து. அ. கோபிநாதராவ்.

# T. R. Tawker & Sons.

## Mount Road, MADRAS.

வைரம், கெம்பு, பச்சை, முதலிய நவரத்தினங்களி னல் அருமையான வேலைப்பாடுள்ள நகைகள் எங்களிட ம் தயாராய் இருக்கின்றன. நகைகளின் மாதிரி வேண்டு பவர்களுக்குத் தபால்மூலமாய் அனுப்பப்படும்.

எங்கள் ஷாப்பில் நகை முதலிய சாமான்கள் வாங் குபவர்களுக்கு 100-க்கு - வீதம் தள்ளிக்கொடுக்கப் படும்.



M. M. 4.

ஒரு நாளைக்குச் சாவி கொடுத்தால் 400 நாளைக் கு ஓடக்கூடிய கெடியாரம்.

இது வெகு வேலைப் பாடுள்ளது. அழகான டயல் உள்ளதும், சரியான காலங்காட்டக் கூடியதும், சாமான்களெல்லாம் உயர்ந்த கிலிட்டுக் கொடுத்ததும் மேலே கண்ணாடி மூடியுள்ளதுமானது. அழகும் ஆச்சரியமும் வாய்ந்தது. விலை ரூபா 45.

டி. ஆர். டாகர் அண்டு சன்ஸ்.

# H. N. Rao & Brothers.

*General Merchants & Commission Agents,*

## Bangalore City.

| | | |
|---|---|---|
| **Second Prize** | **For** | **Silver Medal** |
| **Bellary Exhibition** | **Vegetables &** | **Tanjore Exhibition** |
| **1906.** | **Fruits.** | **1906.** |

Cabbages, Cauli flowers, Carrots, Beetroots, Peas, Potatoes, Beans etc. from Rs. 3, 4, 5, a basket.

Apples, Oranges, Grapes, Mangoes, Raspberries, Strawberries Button holes, Bouquets, Cut flowers, Grafted plants, Seeds supplied at market rates. Assortment of Vegitables & Fruits will be supplied weekly or bi-weekly & customers are requested to send their own list.

Orders for perishablo goods should accompany remittance

**Indian Scents** :— Argaza 1 Rupee per tola.

Udubathi 8 As. 1 Rupee, 2 Rs. 3 Rs. 4 Rs. 6 Rs. per seer.

Silk Kerchieves 12 As. 1 Rupee, 2/8, 3 Rs. 4/8, 6 Rs. 8 Rs 10 Rs. 12 Rs. 15 Rs. each.

# CHILDREN IN INDIA

have much to contend with, owing to the enervating climate,

Early in life they need a tonic and reconstructive to aid in developing their little bones and mucles.

**SCOTT'S EMULSION**

contains the proper bone and tissue builder for children.

IT IS IDEAL.

The results are noticeable shortly after taking.

---




NOT TOUCHED BY HAND.

---

*FOR SALE AT ALL CHEMISTS.*

---

SCOTT & BOWNE, LTD.,

MANUFACTURING

CHEMISTS,

LONDON, ENGLAND

---

# மதுரைத் தமிழ்ச்சங்கத்தில்

## விற்கப்பெறும்புத்தகங்கள்.

"செந்தமிழ்" இரண்டு, மூன்றுந் தொகுதிகள் பைண்ட் செய்யப்பெற்று இப்போது விலைக்குத்தயாராகவுள்ளன. கையிருப்பிற் சிலபிரதிகளேயிருத்தலால், வேண்டியோர் உரியபோதே எழுதி வி. பி- தபால்வாயிலாகப் பெற்றுக்கொள்ளக்கடவர். ஒருதொகுதி விலை ரூ 5. 'பைண்ட்' இல்லாதது ரூ 4—8—0.

### சங்கப்பதிப்பு.

| | | ரூ | அ | பை |
|---|---|---|---|---|
| 1. | ஞானாமிர்த மூலமும் உரையும் ... ... ... | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி ... ... ... ... | 1 | 8 | 0 |
| 3. | ஐந்திணையைம்பதுரை ... ... ... | 0 | 3 | 0 |
| 4. | இனியது நாற்பதுரை, கணுநூல் ... ... ... | 0 | 3 | 0 |
| 5. | புலவராற்றுப்படை (பழையது) ... ... ... | 0 | 3 | 0 |
| 6. | நேமிநாதம் உரையுடன் ... ... ... | 0 | 10 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி உரையுடன் ... ... ... | 0 | 4 | 0 |
| 8. | பன்னிரு பாட்டியல் ... ... ... | 0 | 4 | 0 |
| 9. | அநுமான விளக்கம் ... ... ... | 0 | 4 | 0 |
| 10. | சங்கப்புலவராற்றுப்படையுரை ... ... ... | 0 | 4 | 0 |
| 11. | விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம் ... ... | 0 | 6 | 0 |
| 12. | திணைமாலை நூற்றைம்பது உரை ... ... ... | 0 | 4 | 0 |
| 13. | அட்டாங்க யோகக்குறள் ... ... ... | 0 | 1 | 0 |
| 14. | நான்மணிக்கடிகை (பழையஉரை) ... ... ... | 0 | 3 | 0 |
| 15. | யாப்பு அணியிலக்கணங்கள் [விசாகப்பெருமாளையரது பஞ்சலக்ஷண வினவிடையினின்று எடுத்தவை] ... ... | 0 | 8 | 0 |
| 16. | இயற்கைப்பொருட்பாடம் ... ... ... | 0 | 4 | 0 |
| 17. | திருச்செந்திற்கலம்பகம் ... ... ... | 0 | 3 | 0 |
| 18. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் (கபரு) ... ... | 0 | 1 | 0 |
| 19. | சுகசந்தர்சன தீபிகை ... ... ... | 0 | 12 | 0 |

### மற்றப்பதிப்பு.

| | | | | |
|---|---|---|---|---|
| 20. | தருக்காமிர்தம் ... ... ... ... | 0 | 8 | 0 |
| 21. | அத்துவித வாக்கியத் தெளிவுரை (ஸ்ரீ சிவஞானசுவாமிகள் செய்தது.) ... ... ... ... | 0 | 4 | 0 |

---

☞ விலாசம்:—மதுரைத்தமிழ்ச்சங்கம் மானேஜ்மெண்டு ஆபீஸ், மதுரை

# CHAMBERLAIN'S COLIC, CHOLERA AND DIARRHŒA REMEDY.

வயிற்றுக்கடுப்பு, வாந்திபேதி, சீதபேதி இவைகளுக்கு




சேம்பர்லேன் துரை கண்டுபிடித்த
மருந்து.

இதனால்

வயிற்றுவலி, அதிசாரபேதி, சீதபேதி, வாந்திபேதி, வயிற்றுக்கடுப்பு முதலான குடல் நோய்கள் பலவும் ஒழியும்.

இந்த ஆச்சரியமான மருந்து, உலகத்திலுள்ள மற்ற மருந்துகளைவிட மனுஷகோடிகளுக்கு உதவியாய் நின்று, நோயையும் வேதனையையும் நீக்கி அநேகம் ஆயிரம் உயிர்களைக் காப்பாற்றியிருக்கிறது.

இம்மருந்தை ஒருதரம் குடித்தாலும், எவ்விதகொடிய வயிற்றுவலியும் போய்விடும். பொல்லாத சீதபேதிக்கும், மூன்றுதரம் குடித்தால் போதும்; அவ்வளவோடு வேதனை நீங்கும், வியாதியும் ஒழியும். எப்போதும் பலிக்கும் மருந்து, ஒருபோதும் தப்புவதன்று.

**இது, மூலிகைகளால் ஆன மருந்து. கைபடாமல் செய்த மருந்து.**

**எங்கும் கிடைக்கும்** **சின்ன புட்டி ரூபா. 1.** **பெரிய புட்டி ரூபா. 2**